இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 144 | இதழ் : 19 | திகதி : 13.12.2020 | விலை : 30.00

## சாட்டி, அக்கராயன்குளம்

### பணித்தளங்களுக்குப் புதிய பங்குத்தந்தையர்கள்

சாட்டி புனித சிந்தாத்திரை மாதா திருத்தலத்தின் பரிபாலகராகவும், பங்குத்தந்தையாகவும் அருட்பணி ஜெகன்குமார் கூஞ்ஞ அ.ம.தி அடிகளாரும், அக்கராயன்குளம் பங்கின் பங்குத்தந்தையாக அருட்பணி அல்பின் சேகர் அ.ம.தி அடிகளாரும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இதுவரை இப்பணித்தளங்களில் சிறப்பான பணியாற்றி விடைபெறும் முறையே அருட்பணி லொசிங்ரன் அ.ம.தி. அருட்பணி ரவெல் அ.ம.தி ஆகியோருக்கு யாழ். மறைமாவட்டம் தனது நன்றிகளைத் தெரிவித்து நிற்கிறது.

## வெளிவந்துவிட்டது ! "இறுதி அஞ்சலி"

அமரர் அருட்பணி. இ. ஜேசுதாசன் பிலிப்ஸ் (அ.ம.தி) அடிகளாரின் "இறுதி அஞ்சலி" இறந்தோர் வழிபாட்டுக் கைநூல் புதிய மொழிபெயர்ப்பில் வெளிவந்துவிட்டது.

இவ் வழிபாட்டுக் கைநூலைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் "புனித வளன் அச்சகத்தில்" பெற்றுக்கொள்ளலாம்.

## "தற்கால, எதிர்கால சந்ததியினர் நடந்தவற்றை மறந்துவிட நாம் அனுமதிக்கக் கூடாது"

### 'அனைவரும் உடன் பிறந்தோரே' திருமடலில் திருத்தந்தை அறிவுரை



திருத்தந்தை பிரான்சிஸ் அண்மையில் வெளியிட்ட திருமடலின் ஏழாம் அதிகாரத்தில் மன்னிப்பு, ஒப்புரவு ஆகியவற்றின் அர்த்தங்கள் பற்றித் தெளிவாகக் குறிப்பிடுகின்றார்.

ஏதோ நடந்தவை நடந்து முடிந்துவிட்டது, நாம் எதிர்காலம் பற்றிச் சிந்திப்போம் என்ற எண்ணம் தவறானது. நடந்து முடிந்த கசப்பான வரலாற்று உண்மைகளின் அடிப்படையில்தான் அமைதியான எதிர்காலம் பற்றிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டும். எனவே, அவற்றை நினைவுகூர்வதும், தற்கால, எதிர்கால சந்ததியினர் அவற்றை மறந்துவிடாமல் பாதுகாப்பதும் எமது கடமையாகும்.

எனினும் நடந்து முடிந்தவற்றின் கசப்பான உண்மைகள் எம்மைப் பழிவாங்கும் நிலைக்கு அழைத்துச்செல்லாமல், மன்னிப்புக்கும், ஒப்புரவுக்குமே வழிநடத்தவேண்டும்.

அடக்குமுறையாளரை மன்னிப்பதும் அவர்களோடு ஒப்புரவாகுவதும் என்பது அவர்களின் அநீதிகளை, வன்முறைகளை அங்கீகரிப்பதாகவோ, அல்லது அவர்கள் தொடர்ந்தும் அநீதி செய்ய அனுமதிப்பதாகவோ எண்ணக்கூடாது. மாறாக, அவர்கள் தமது தவறுகளை உணர்ந்து மனந்திரும்ப், பரிகாரம் செய்ய உதவுவதாகும். மன்னிப்பும், ஒப்புரவும் அநீதி செய்தோரும், அதனால் பாதிக்கப்பட்டோரும் மாண்புடன் வாழ வழிசமைக்கும். இவ்வாறு திருத்தந்தை தனது திருமடலில் கூறியுள்ளார்.

## புனித சூசையப்பர் யூபிலி ஆண்டு 2021 திருத்தந்தை அறிவிப்பு


08.12.2020 - 08.12.2021



புனித சூசையப்பரை உலகளாவிய திரு அவையின் பாதுகாவலராக திருத்தந்தை 9ம் பத்திநாதர் அறிவித்ததன் 150 ஆண்டு நிறைவில் எம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் "Patris Corde" "ஒரு தந்தையின் இதயத்துடன்" என விழித்து திருத்தந்தை தமது திருத்தூது மடலை வெளியிட்டுள்ளார். இக்காலத்தை சிறப்பிக்கும் முகமாக 08.12.2020 முதல் 08.12.2021 வரை "புனித சூசையப்பர் ஆண்டு" எனப் பிரகடனப்படுத்தியுள்ளார்



## மருத்துவமனை வீதியில் அழகுற அமைந்துள்ள அற்புதமாதா



யாழ்ப்பாணம் அடைக்கல அன்னை ஆலய வளாகத்தில், யாழ் போதனா மருத்துவமனை வீதிப்பக்கமாக அமைந்திருந்த புனித அற்புத மாதா திருச்சுரூபம் புனரமைப்பு செய்யப்பட்டு 08.12.2020 செவ்வாய் கிழமை அன்று திறந்து வைக்கப்பட்டது.

அடைக்கல அன்னை ஆலயப் பங்குத்தந்தை அருட்திரு J.B. அன்ரனிதாஸ் அடிகளின் வழிகாட்டலில் அழகிய தோற்றத்துடன் புனரமைப்புச் செய்யப்பட்டுக் காட்சி தரும் அன்னையின் திருச்சுரூபம் மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்பணி P.J.ஜெபரட்ணம் அடிகளினால் ஆசீர்வதித்துத் திறந்து வைக்கப் பட்டது. இந்நிகழ்வு அன்னையின் அமலோற்பவப் பெருவிழாவன்று நடைபெற்றுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## மூதாளர் காப்பகத்திற்குப் புதிய கட்டடத்தொகுதி



கொழும்புத்துறை புனித வளனார் மூதாளர் காப்பக வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நிர்வாகக் கட்டடத்தொகுதி யாழ்.மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களினால் 28.11.2020 சனிக்கிழமை அன்று ஆசீர்வதித்துத் திறந்து வைக்கப்பட்டது.

இக்கட்டடத் தொகுதி ஜேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் நிதி அனுசரணையுடன் அழகிய தோற்றத்துடன் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இவ்வளாகத்தில் அமையப் பெறவுள்ள மூதாளர் தங்குமிடக் கட்டடத் தொகுதி அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு நிகழ்வும் இடம்பெற்றது. இதற்கான அடிக்கல் மறைமாவட்ட நிதி முகாமையாளர் அருட்பணி S. நேசநாயகம் அடிகளினால் நாட்டப்பட்டதுடன் இக்கட்டடம் அமைப்பதற்கான நிதி அனுசரணையினையும் ஜேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகமே மேற்கொள்ள இருக்கின்றது. இப்பணியகத்தின் இயக்குநர் அருட்பணி T. நிருபன் அடிகளின் கடின முயற்சியுடனேயே இப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## புனித மரியன்னைப் பேராலய "செபமாலைப் பூந்தோட்டத்தில்" மரியன்னையின் திருச்சுரூபம்



யாழ். புனித மரியன்னை பேராலய வளாகத்தில் அமைந்து வரும் "செபமாலைப் பூந்தோட்டத்தில்" நிர்மாணிக்கப்பட்ட புனித மரியன்னையின் திருச்சுரூபம் யாழ் . மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி P.J. ஜெபரட்ணம் அடிகளாரால் 08.12.2020 அன்று ஆசீர்வதிக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது.

பேராலயப் பங்குத்தந்தை அருட்பணி J.J.மவுலிஸ் அடிகளினதும் உதவி பங்குத்தந்தையர்களினதும் துணையுடனும் நலன் விரும்பிகள் சிலரினது அயராத முயற்சியினாலும் இத்திருச்சுருபமும் செபமாலைப் பூங்காவும் அமைக்கப்பட்டுள்ளது. இயற்கையில் மரியன்னையோடு இணைந்து இறைபுகழ்பாட இச்செபமாலைப் பூங்கா இறைமக்களுக்கு உதவியாக அமைந்துள்ளதுடன் இந்நிகழ்வு மரியன்னையின் அமலோற்பவப் பெருவிழாவன்று இடம்பெற்றுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## புனித சூசையப்பர் ஆண்டுக்கான செபம்

மீட்பரின் பொறுப்பாளரே! தூய கன்னி மரியாளின் துணையாளரே, வாழ்க! கடவுள் தனது ஒரே திருமகனை உம்மிடமே ஒப்படைத்தார். உம்மிடமே மரியாள் தனது முழு நம்பிக்கையையும் கொண்டிருந்தார். உம்முடனேயே கிறிஸ்து மனிதரானார். பேறுபெற்ற கனவின் சூசையப்பரே, எங்களுக்கும் உம்மையே ஒரு தந்தையாகக் காட்டி, வாழ்வின் பாதையில் எங்களை வழிநடத்தும். அருள், இரக்கம், மன உறுதியைப் பெற்றுத்தாரும். அனைத்துத் தீமைகளிலிருந்தும் எங்களைப் பாதுகாத்தருளும். ஆமென்.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## தமிழ் அரசியல் கைதிகளின் நிலையும் ஈழத்தமிழர்களின் மனசாட்சியும்

இலங்கையில் உள்ள சிறைச்சாலைகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், சிறைச்சாலைகளுக்குள் கொரோனாத் தொற்று பரவுமென இலங்கை அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. ஆனால் இடநெருக்கடிக்குத் தீர்வு காணும் திட்டங்கள் எதுவுமே அரசாங்கத்திடம் இருப்பதாகத் தெரியவில்லையென பிரதான எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ள நிலையில், கொழும்பு மகசீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலைக்கு உதவிபுரியுமாறு இலங்கை ஒற்றையாட்சி அரசின் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் அவசரக் கோரிக்கை விடுத்துள்ளனர். செய்தி ஊடகங்களுக்குப் புதன்கிழமை இரவு அனுப்பியுள்ள மின் அஞ்சலில் இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

மகர சிறைச்சாலையில் சிறைக்காவலர்களினால் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் எட்டுக் கைதிகள் கொல்லப்பட்டும் மேலும் 25பேர் படுகாயமடைந்துள்ள நிலையில், தமிழ் அரசியல் கைதிகளாகிய தங்களின் நிலை எதிர்காலத்தில் என்னவாக இருக்கும் என்ற தொனியில் அந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள சிறைச்சாலைகளில் ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி நிலைமைகளையடுத்து ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய அர சாங்கம் சில நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளது. அதாவது சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சமூகவிரோதக் குற்றச் செயல்களில் ஈடுபட்ட கைதிகள், கொலைக் குற்றச்சாட்டில் ஈடுபட்ட கைதிகள் என்று பலவேறு வகையான கைதிகளையும் தரம்பிரித்து சிறைச்சாலைகளில் அவர்களின் நடத்தைகள் பற்றியும் மதிப்பீடு செய்து விடுதலை செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.


சுமார் 8000 கைதிகளை விடுவிப்பதற்கும் மரண தண்டனை மற்றும் ஆயுள்தண்டனைக் கைதிகளின் தண்டனைக் காலத்தை வரையறுப்பதற்குமான முன்னாயத்தங்களை அரசாங்கம் மேற்கொண்டுவருவதாக இலங்கைச் சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. ஆகவே அரசாங்கத்தின் அந்த அறிவிப்பைப் பயன்படுத்தித் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கும் வழியேற்படுத்தப்பட வேண்டுமெனத் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எண்ணாயிரம் கைதிகளை விடுவிக்கவுள்ள அரசாங்கத்தின் முயற்சியில் தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வது குறித்து அரசாங்கம் பரிசீலிக்கவில்லை என்பது வெளிப்படையாகவே தெரிகின்றது. ஆனால் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள்தான் இது பற்றி எடுத்துரைக்க வேண்டும். சிறைச்சாலைகளில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும் இட நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் வகையிலும் எண்ணாயிரம் கைதிக்ளை விடுவிக்கவுள்ளதாக அரசாங்கம் பகிரங்கமாக அறிவித்து இரண்டு வாரங்கள் கடந்துவிட்டன.

ஆனால் இதுவரையும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டுமென்ற எந்தவொரு கோரிக்கையும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களினாலோ அல்லது பொது அமைப்புகளினாலோ விடப்படவில்லை. இந்தவொரு நிலையிலேதான் தமிழ் அரசியல் கைதிகள் இந்தக் கோரிக்கையை முன்வைத்திருக்கின்றனர். அதாவது தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் மனசாட்சியைத் தட்டி எழுப்பியிருக்கின்றனர். இந்த சந்தர்ப்பத்தில் அனைத்துத் தரப்பினரும் இனம், மதம், கட்சி, அரசியல், பிரதேச வேறுபாடுகளை ஒருபுறம் வைத்துவிட்டு மனித நேயத்திற்கு மதிப்பளித்து கொள்கையளவில் ஒன்றுபட்டு எமது விடுதலைக்கு வழி சமையுங்கள் என தமிழ் அரசியல் கைதிகள் வினயமுடன் கோரியுள்ளனர். இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக சிறையே வாழ்க்கை எனச் சீரழிந்து கொண்டிருக்கும் எமது பிள்ளைகளை விடுவிக்க நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று தீர்மானிக்க வேண்டிய காலகட்டமிது. ஈழத்தமிழர் அரசியல் விடுதலைப் போராட்டத்தின் பக்கவிளைவுகளில் இந்தக் கைதிகளின் அவல நிலையும் முக்கியமானது. பொது மக்களுக்கும் அதில் பொறுப்புண்டு.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

# வளன்புரத்தில்
# புனித வளன் ஆண்டு பிரகடனம்




புனித வளனாரை உலகளாவிய திரு அவையின் பாதுகாவலராகத் திருத்தந்தை 9ம் பத்திநாதர் அறிவித்ததன் 150 ஆண்டு நிறைவில் எம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 08.12.2020 முதல் 08.12.2021 வரையிலான காலப்பகுதியை "புனித வளன் ஆண்டு" எனப் பிரகடனப்படுத்தியுள்ளார்.

இதை நினைவுகூரும் முகமாக கொழும்புத்துறை புனித வளனார் ஆலயத்தில் 09.12.2020 புதன்கிழமை அன்று மாலை 5.30 மணியளவில் பாஷையூர்ப் பங்குத்தந்தை அருட்பணி எம்.ஜெறோ செல்வநாயகம் அடிகளாரால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளாரால் புனித வளனார் கொடி ஏற்றப்பட்டு, கனவு காணும் வளனார் திருவுருவமும் ஆசீர்வதிக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது.

பாலகன் இயேசுவையும், மரியன்னையையும் ஏரோதுவிடமிருந்து பாதுகாத்த புனித வளனார் எம்மையும், எம் திருஅவையையும் தீமைகளிலிருந்து பாதுகாக்க இவ்வாண்டில் சிறப்பாக மன்றாடும்படி குருமுதல்வர் தம் ஆசியுரையில் வேண்டி நின்றார்.

# துயர் பகிர்கின்றோம்

யாழ்ப்பாண மறைமாவட்ட அருட்பணியாளரும் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றும் அருட்பணி I.P. தயாபரன் அடிகளாரின் அன்புத் தாயார் **திருமதி. இருதயநாதர் விக்ரோறியாப்பிள்ளை** அவர்கள் கடந்த 27.11.2020 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தைக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன்கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

யாழ்ப்பாண மறைமாவட்ட அருட்பணியாளரும் அவுஸ்ரேலிய ஆன்மீகப் பணியகத்தின் இயக்குநராகவும் பணியாற்றும் அருட்பணி A.புனிதகுமார் அடிகளாரின் அன்புத் தந்தை **திரு. மரியநாயகம் ஆசீர்வாதம்பிள்ளை** அவர்கள் கடந்த 04.12.2020 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்று இறுதிச்சடங்கில் பங்குபற்றமுடியாத நிலையில் இருந்த அருட்தந்தைக்கும் மற்றும் உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன்கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.


11வது ஆண்டு நினைவஞ்சலி

1 வது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
பேதுருப்பிள்ளை
செபஸ்ரியாம்பிள்ளை
மலர்வு உதிர்வு
31.07.1923 05.12.2009



அமரர்
செபஸ்ரியாம்பிள்ளை
மேரி றீற்றா
மலர்வு உதிர்வு
07.02.1938 18.12.2019

உயிர்ப்பும் உயிரும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வர் (யோவான் 11:25)

5ம் வட்டாரம்,
மண்டைதீவு.

குடும்பத்தினர்.

AD 81



# பொன் விழா வாழ்த்துக்கள்

மண்ணகம் 08 . 12 . 1939



விண்ணகம் 27 . 04 . 2020

குருத்துவம்
19.12.1970

அருட்பணி மார்சேல் இராஜநாயகம்
(பதுளை மறைமாவட்டக் குருமுதல்வர்
மிருசுவில் மண்ணின் குருமணி)

விண்ணக யூபிலி நாயகனே
மண்ணகத்திலிருந்து வாழ்த்துகின்றோம்
இறைபணிக்கென உம்மை அர்பணித்து
ஐம்பது ஆண்டுகள் அடைந்த நாயகனே
நாற்பத்தொன்பதாவது ஆண்டினை
நலமுடன் ஒத்திகை பார்த்தோம்
ஐம்பதாவது ஆண்டினை அனைவரும்
ஐயம் இன்றிக் கொண்டாட ஆனால்
ஆண்டவன் சித்தம் நிறைவேற
அன்புடையோர் பரிதவிக்க
அசையாது அமைதியாய்த் துயில் கொண்டாயோ
அன்பர் எம் உறவை மறந்து

எம் உயிர் உள்ளவரை – உத்தம
எங்கள் உறவைக் குருவை
எண்ணத்தில் கூட நாம் மறவோம்
எம் உறவான யூபிலி நாயகனே
விண்ணகத்தில் உம் பெற்றோர்
விண் வாசிகளான சகோதரருடன்
விமரிசையாய்க் கொண்டாட
விண்ணக யூபிலி நாயகனை வாழ்த்துகின்றோம்

உம்மை நினைத்து உருகும்
உம் உறவுகள்
மிருசுவில்

AD 85

# மத வேறுபாடுகளின்றி எல்லா மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் எண்ணம் கொண்டவர் யாழ் ஆயர்

ஆயரின் ஆயத்துவப் பணியின்
ஐந்து ஆண்டுகள் நிறைவில்
குருக்கள், துறவியர், இறைமக்கள் சார்பாகக்
குருமுதல்வரின் வாழ்த்து

எமது யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தின் ஆயராகத் தனது பணி வாழ்வின் ஐந்து ஆண்டுகளை நிறைவுசெய்யும்எமது அன்புக்கும்பெருமதிப்புக்கும்உரிய ஆயர் பேரருட்திரு. ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களுக்கு யாழ். மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்கள், துறவியர், பொது நிலையினர் சார்பாக எமது வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவிக்கின்றோம்.

ஆன்மீக வாழ்விலும், சமூக வளர்ச்சியிலும், கல்வி உயர்விலும், மக்களின் விடுதலை வாழ்விலும் கடந்த ஐந்து ஆண்டுகளாக எமது ஆயர் ஆற்றிய சிறப்பான பணிகளை இவ்வேளையில் நன்றியோடு நினைவுகூருவது எமது கடமையாகும்.

தான் ஆயராகப் பொறுப்பேற்றவுடன் முதற் செயற்பாடாக அவர் கூட்டிய மேய்ப்புப்பணி மாநாடு வழியாக இறைமக்களின் ஆன்மீக வாழ்வின் குறை நிறைகளை ஆராய்ந்து, விசுவாச வளர்ச்சிக்குத் தடையான வற்றை அகற்றி, நம்பிக்கை வாழ்வில் அனைவரும் சாட்சிகளாக வாழ அனைவருக்கும் வழிகாட்டினார். அந்த மாநாட்டில் எட்டப்பட்ட தீர்மானங்களைப் பல சவால்கள் மத்தியிலும் கடந்த ஐந்து ஆண்டுகளாகத் துணிவுடன் நிறைவேற்றி வருகின்றார்.

போர்க்காலத்தில் அழிந்துபோன எத்தனையோ ஆலயங்கள், பங்குமனைகள் இன்று புதிதாக, அல்லது புதுப்பொலிவாகக் காட்சி தருகின்றமைக்குக் காரணமாக இருந்து தனது முழுமையான பங்களிப்பினால் எமது ஆயர் மக்களின் விசுவாச வாழ்வுக்கு வழங்கிய இக்கொடைகளுக்காக எமது இதய நன்றிகளைக் கூறுகின்றோம். தனது ஐந்தாவது ஆண்டு நிறைவில் கொழும்புத்துறையில் அழிவுக்குள்ளான முதியோர் மடத்தைப் புதிதாகக் கட்டித் திறந்து வைக்கும் செயல் குறிப்பிடப்படவேண்டிய தொன்றாகும். அவருடைய ஐந்துவருடப் பணிவாழ்வின் பூர்த்தியின் பரிசாகும்.

கத்தோலிக்க மக்களுக்கு மட்டுமன்றி மத வேறுபாடுகளின்றி எல்லா மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் எண்ணம் கொண்டவராக, மக்களின், குறிப்பாக வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழைமக்களின் துயர் துடைக்கும் பணிகளில் எமது ஆயரின் பங்களிப்பு குறிப்பிடக்கூடியதொன்றாகும். எமது மறைமாவட்டத்தின் மனித முன்னேற்ற நிலயத்தினூடாக எமது மறைமாவட்டத்தில் தேவைகளோடு வாழும் மக்களுக்கும், தேசிய சமூக முன்னேற்ற நிறுவனத்தின் தலைவர் என்ற வகையில் இலங்கை முழுவதிலுமுள்ள ஏழை மக்களுக்கும் எமது ஆயர் அவர்கள் ஆற்றும் பரந்துபட்ட பணி பாராட்டுதற்குரியதாகும்.

கல்வித்துறையில் எமது ஆயர் கொண்டுள்ள ஆழமான அனுபவத்தின் சிறப்பான விளைவுகளைக் கடந்த ஐந்து வருடங்களில் அனைவராலும் வெகுவாக அவதானிக்கக்கூடியதாகவிருந்தது. கல்வியில் பின்தங்கிய பாடசாலைகளை இனங்கண்டு அங்கு குருக்கள், துறவிகளைப் பணியாற்ற அழைத்து, மாணவர்கள் பல்வேறு



துறைகளில் முன்னேற்றம் காண வழிவகுத்த பெருமை எமது ஆயரையே சாரும்.

தனது ஆளுமையையும், ஏனைய சமூக, அரசியல் தலைவர்களுடனான பரஸ்பர நல்லெண்ணத்தையும் மக்களுடைய விடுதலை வாழ்வின் பணிகளுக்காகப் பயன்படுத்தி, குறிப்பாகத் தமிழ் மக்கள் அனுபவிக்கும் பல்வேறு அடக்குமுறைகளின் அநீதித்தன்மையைத் தலைவர்களுக்கு உணர்த்தி அவர்கள் தமது செயற்பாடுகளை திருத்தி அமைக்கத் தன்னுடைய பொறுப்புவாய்ந்தபங்களிப்பை எமது ஆயர் அவர்கள் கடந்த ஐந்து வருடங்களில் சிறப்பாக வழங்கி அர்ப்பணித்துச் செயற்பட்டதற்காகவும் எமது நன்றிகளைக் கூறிநிற்கின்றோம்.

கொரோனா வைரஸின் தீமை நிறைந்த இக்காலத்தில் பல்வேறு நெருக்கடிகளைச் சந்திக்கும் மக்களின் ஆன்மீகத் தலைவராக இருந்து காலத்துக்கு ஏற்ற வகையில் பணிபுரிய குருக்கள், துறவியரை வழிநடாத்தியும், மக்களை ஆற்றுப்படுத்தும் பணியையும் ஆற்றிக் கொண்டிருக்கும் எமது ஆயருக்கு எமது நன்றிகளைக் கூறும் நாம், ஆயர் அவர்கள் மேலும் பல்லாண்டுகள் நிறைவான உடல், உள நலத்தோடு அமைதியுடன் வாழ, இறை சித்தத்திற்கேற்ப பணியாற்ற இறை ஆசீர் வேண்டிநிற்கின்றோம்.

# கொவிட் -19 சூழ்நிலையிலும் வன்முறைகளை எதிர்கொள்ளும் பெண்களை வலுப்படுத்துவோம்

நிறைவேற்றப்படாத தேவை குடும்பத்தில் இருக்குமாயின் அங்கே பிரச்சினை ஆரம்பமாகின்றது. இரண்டுக்கும் மேற்பட்ட நிறைவேற்றப்படாத தேவைகள் ஏற்படுமானால் அது முரண்பாடாக உருப்பெறுகின்றது. நிறைவேற்றப்படாத தேவைகளின் வருத்தத்திற்குரிய வெளிப்பாடே வன்முறையாகும். குடும்பத்தின் தேவைகள் முழுமையாகப் பூர்த்திசெய்யப்படுகின்ற போது அங்கு மகிழ்ச்சி, திருப்தி, நிறைவு, பரஸ்பர உறவு என்பன ஏற்பட்டு வன்முறை உருவாகுவதற்கான வாய்ப்பு இல்லாமல் போகின்றது. ஆனால் குடும்பத்தின் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்ற போது கோபம், வெறுப்பு, விரக்தி என்பன ஏற்படுகின்ற போது அதுவே வன்முறையாக மாற்றம் பெறுகின்றது.

இவ் வன்முறையானது பாலியல் ரீதியான, வார்த்தைகள் ரீதியான, உடல் ரீதியான, உள ரீதியான, சமூக ரீதியான, மொழி ரீதியான, இன ரீதியான, உணர்வு ரீதியான, சமய ரீதியான இப்படி பல்வேறுபட்ட வன்முறைகள் பெண்களுக்கு ஏற்படுகின்றது. ஆனால் பெண்களுக்கு எதிரான வன்முறையானது ஒரு மனித உரிமை மீறல் ஆகும். அதிலும் கொவிட் -19 சூழ்நிலையில் ஏற்படும் வன்முறைகளைப் புறக்கணிக்க முடியாது. அதாவது பெண்களை வலுப்படுத்துகின்ற போதும், வன்முறைகளைத் தடுக்கின்ற போதும், ஆதரவு வழங்குகின்ற போதும் பெண்களின் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுகின்ற அதே வேளை பெண்களின் உடல், உள ரீதியாக நல்வாழ்வை மேம்படுத்தி மகிழ்ச்சியாக வாழ்வதற்கு வலுச் சேர்க்கும்.


கொரோனாச் சூழ்நிலையில் ஏற்படும் வன்முறைகள் ஆனது கொரோனாவிலும் பார்க்க அதிகமான பயத்தினையும் மன அழுத்தத்தையும் ஏற்படுத்துகின்றது. எனவே முன்னரிலும் பார்க்கத் தற்போது கொடூரமான வன்முறைகள் அதிகரித்துள்ளது என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. கோவிட் -19 கொரோனா அச்சமானது துஸ்பிரயோகத்தையும், வன்முறைகளையும் அதிகரிக்கச் செய்கின்றது.

இவ்வாறன சூழ்நிலையில் வேலைக்குச் செல்லுகின்ற பெண் தலைமை தாங்கும் குடும்பப் பெண்கள் "Lock Down" காலத்தில் வேலை இன்றி மற்றவரிடம் உதவி கேட்டுச் செல்கின்ற போது சமூக வலை அமைப்பின் சீர்குலைவினாலும் வருமானம் மற்றும் வேலையில்லாமல் அதிக நேரம் ஆண்கள் வீட்டில் இருப்பதனாலும் ஆண்கள் பெண்களின் உணர்வுகளைச் சரியான முறையில் புரிந்துகொள்ளாமையினாலும் வீட்டில் இருக்கின்ற போது தாங்களும் சேர்ந்து உதவி செய்யாமல் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் கையாளுகின்றார்கள்.

கொரோனாச் சூழ்நிலை காலத்தில் வன்முறைகளை எதிர்கொள்ளும் பெண்கள் தங்களை வலுப்படுத்த வேண்டுமானால் ஆண்கள் கோபப்படும் போது அல்லது எரிச்சல்படும் போது அந்த இடத்தை விட்டு நகர்ந்து வேறு இடம் செல்லுதல், நேரமயமான மன நிலைகளை மாற்றிக் கொள்ளுதல், மூச்சுப் பயிற்சி செய்தல், "முஸ்டி முத்திரை அதாவது யோக முத்திரைகள் செய்தல், இவ்வாறான நேரத்தில் மன அழுத்தம் எல்லோருக்கும் ஏற்படும் என்பதை உணர்ந்துகொள்ளல், அன்பான இனிய வார்த்தைகளைப் பேச முயற்சித்தல், புரிந்துணர்வோடு விட்டுக்கொடுத்து வாழுதல், போன்ற வழிப்படுத்தல்கள் மூலம் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் குறைத்துக்கொள்ள அனைவரும் ஒன்று சேர்ந்து முயற்சி செய்வோம். யாராவது வன்முறையால் பாதிக்கப்படுகின்றார்கள் என்றால் அவர்கள் பாதுகாப்பாக இருப்பதற்கான தொடர்பினை ஏற்படுத்தி அவர்களைப் பாதுகாத்து வலுப்படுத்துவோம்.



அருட்பணி விஜேந்திரன்



## நான் ஒரு கதையாக மிஞ்சுவேன்

கிளை கிளையாகப் பிரிந்து உடல் முழுவதும் நகர்ந்துகொண்டேயிருக்கின்ற இரத்தக் குழாய்களில் மிதந்து கொண்டேயிருக்கிற வெண்குருதிச் சிறு துணிக்கை, செங்குருதிச் சிறுதுணிக்கை, குருதி சிறுதட்டுக்கள் மனிதனை உயிருடன் வைத்திருப்பது போல, மனதின் நதிப்படுக்கையெங்கும் சிறிதும் பெரிதுமாய் மிதந்துகொண்டே இருக்கிற கதைகள்தான் மனிதனை உயிர்ப்புடன் வைத்துக்கொண்டே இருக்கின்றன. எப்பொழுது மனிதனிடம் கதைகள் தீர்ந்து போகிறதோ அப்பொழுது அவன் வேர் காய்ந்து போன மரம் போலக் கருகத் தொடங்கி விடுகிறான்.

அருட்பணி எஸ்.அஜந்தன்

மனிதன் பேசப்பேசத் தீர்ந்துபோகாத கதைகளால் ஆனவன். இந்தப் பூமிக்கு வந்த நாள் முதல் தாயின் மடியில், சேலையில் கட்டிய ஏணையில், வீட்டுத் திண்ணைகளில், பல கால் ரேகைகள் நிறைந்து கிடக்கும் முற்றத்தில், வேப்பமரத்தடியில், வேலி ஓரத்தில், சந்தைகளில், சந்திகளில், உலகின் தெருக்களில், மனிதன் நகர்கிற அத்தனை திசைகளிலும் காற்றைப்போல கதைகளும் அவனுள் வந்து வந்து நிறைந்து கொண்டே இருக்கின்றன.

கதைகளே இல்லாத ஒரு உலகத்தில் ஒரு மனிதனால் வாழவே முடியாது. ஒவ்வொரு மனிதனும் தனக்கான கதைகளைச்சுமந்தபடியேதான்நகர்கிறான். கேட்பதற்குக் காதுகள் கிடைக்காதபோது ஒரு குட்டையைப் போல கதைகள் அவனுள் தேங்கி விடுகின்றன. பிறகு சிலர் அந்தக் கதைகளைத் தங்களோடே பேசிக் கொள்ளத் தொடங்குகின்றார்கள். அது தன் கதைகளைக்கேட்க நேரமில்லாமல் ஓடிக்கொண்டிருக்கிற மனிதர்கள் மீதான கோபமாகப் பீறிட்டு எழுகிறது. தமக்குள் இருந்து பீறிட்டுப் பீறிட்டுக் கிளம்பி, ஒரு கொடூரமானமிருகத்தைப்போல உள்ளிருந்துகர்ச்சனை செய்கிற கதைகளின் சத்தம் தாங்காமல் பலர் கழுத்துகளில் கயிறு போட்டு இறுக்கி கதைகளைக் கொன்றுவிடப் பார்க்கிறார்கள். கதைகளோ, தொங்கும் பிணத்தின் கயிறுகள் வழியே ஊர்ந்து ஊர்ந்து...

(தொடர்ச்சி 11 பக்கம்)

# எம் இறை நம்பிக்கையின் கனவு இல்லம்

## (மரணம் மற்றும், நிலை வாழ்வு பற்றிய இறையியல் அலசல்)



அருட்பணி அ. சியான்ஸ்ரன் ஜெனிஸ் அமதி

எங்கே இருந்தாலும் "எப்படா வீட்டிற்குப் போகலாம்" என்று அடிக்கடி கடிகாரம் பார்த்துக் காத்திருந்த தருணங்கள் எல்லாம் ஆயிரம் தான் இருந்தாலும் எங்களுடைய வீட்டைப் போல எதுவும் வராது என்ற உண்மையைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

எவ்வளவு தான் பிரச்சினைகள் இருந்தாலும் நம்முடைய வீட்டில் இருப்பது போல வேறு எங்கேயும் நாம் சந்தோசமாக இருக்க முடியாது. இப்படித்தான் நம்முடைய வீடு இருக்க வேண்டும் என்று பல நாட்களாகச் சிந்தித்து நம் வீட்டை நாம் கட்டி இருப்போம் அல்லது கட்டிக் கொண்டிருப்போம். ஒரு சில பொருட்களை வாங்கி, வீட்டை அழகு படுத்தி இருப்போம். இன்னும் பூங்கன்றுகளையும், பயன்தரும் மரங்களையும் நாட்டி அதன் அழகை இன்னும் மெருகூட்டி இருப்போம். ஆம் எங்களுடைய வீடு எமக்கு மாபெரும் சொத்துத்தான்.

அந்த வகையிலே நம்முடைய கத்தோலிக்க இறை நம்பிக்கையும் ஒரு கனவு இல்லத்தைப் பற்றி ஆழமாகப் பேசுகின்றது. "நாம் இவ்வுலகில் குடியிருக்கும் உடலாகிய கூடாரம் அழிந்துபோனாலும் கடவுளிடம் இருந்து கிடைக்கும் வீடு ஒன்று விண்ணுலகில் நமக்கு உண்டு" (காண்க 2கொரி 5:1). அந்தக் கனவு இல்லம் எவ்வாறு இருக்கும்? எப்போது சாத்தியமாகும்?அதன் அழகை எவ்வாறு மெருகூட்ட முடியும் என்பதைப் பற்றி ஆராய்வதே எனது நோக்கமாக இருக்கிறது. வேறுவிதமாகக் கூறுவோம் என்றால், மரணம் பற்றியும் அதன் பின்பு வருகின்ற வாழ்வைப் பற்றியும் ஆராய்வதே எனது நோக்கம். மனிதர்களாகப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் நிச்சயமாக ஒருநாள் இறப்போம் என்பது நாம் அனைவருக்கும் தெரிந்த ஒரு விடயம். இந்தமரணத்தைப் பற்றி நமது கத்தோலிக்க திருஅவை மிகவும் ஆழமான நம்பிக்கையை அறிக்கையிடுகின்றாள். இவ் அறிக்கையானது மற்றைய மதங்களின் கோட்பாடுகளில் இருந்தும் மெய்யியல் சிந்தனைகளில் இருந்தும் வேறுபட்ட தனித்துவமான ஒரு இறை நம்பிக்கையாக இருக்கின்றது.

**மரணத்தின் பின் வாழ்வுஉண்டா..?**

"இருக்கிறதே ஒரு வாழ்க்கை, அத செமயா வாழ்ந்திட்டு செத்திடனும்" என்று பலர் சொல்வதை நான் கேட்டிருக்கின்றேன். இறந்த பின் வாழ்வு இருக்கிறதா என்ற வினாவிற்கு ஒருசிலர் "ஆம்" என்றும் ஒருசிலர் "இல்லை" என்றும் வேறுசிலர் "தெரியாது" என்றும் வாதாடுகின்றனர். ஆனால் ஒரு கத்தோலிக்கனாக இறந்த பின் வாழ்வு உண்டு என நம்புகிறேன். இதைத் தான் எமது நம்பிக்கை அறிக்கையிலும் "இறந்தோரின் உயிர்ப்பையும் வரவிருக்கும் மறுஉலகவாழ்வையும் எதிர்பார்க்கின்றேன்" என்று ஆணித்தனமாக அறிக்கையிடுகின்றோம். மரணத்தின் பின் வாழ்வு உண்டு என்பதை எவ்வாறு எளிய முறையில் நிருபிக்க முடியும் என்று சிந்தித்தேன். இதற்கு சிறந்த உதரணமாக தாயின் கருவறை அமைகின்றது. மனிதனாகப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் தாயின் கருவறைக்குள் பத்து மாதங்களோ, ஒன்பது மாதங்களோ வாழ்ந்திருக்கின்றோம். கருவறையோடு எம்முடைய வாழ்வு முடிந்து போகவில்லை. கருவறையைத் தாண்டி இன்னுமொரு அழகியவாழ்வு இந்தப் பூமியில் இருக்கின்றது என்று ஆழமாக நம்புகின்றோம், அதை அனுபவிக்கின்றோம். அதேபோலக் கருவறையையும், இவ்வுலகவாழ்வையும் விட்டு இன்னுமொரு வாழ்வு இருக்கிறது என்பதைக் கருவறையே எமக்கு உணர்த்துகின்றது.

"கத்தோலிக்கர்களாகிய எமக்கு இறப்பின் ஊடாக வாழ்வு மாறுபடுகின்றதேஅன்றி அழிக்கப்படுவதில்லை. இறந்தவர்கள் ஒவ்வொருவரும் கிறிஸ்து உயிர்த்தெழுந்ததுபோல உயிர்த்தெழுவாஉகள். "இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார். இது அனைவரும் உயிருடன் எழுப்பப்படுவர் என்பதை உறுதிப்படுத்துகின்றது" (காண்க 1கொரி15:20).

இந்த இறைவார்த்தையை ஆய்வுசெய்தால், இறந்த ஒவ்வொருவரும் உயிர்த்தெழுவார்கள் என்ற உண்மை தெளிவாக எடுத்துக்காட்டப்படுகின்றது. அந்த உயிர்த்தெழுதல் நன்மைசெய்தோருக்கு மட்டுமன்றி தீமைசெய்தோருக்கும் உண்டு. "நல்லன செய்தோர் வாழ்வுபெற உயிர்தெழுவர் தீயனசெய்தோர் தண்டனைத் தீர்ப்புப் பெறஉயிர்த்தெழுவர்".

(காண்க யோ5:29).

நாம் உயிர்த்தெழுவோமானால் எவ்வாறு இருப்போம் என்பது எனது அடுத்த கேள்வியாக இருக்கின்றது. திருவிவிலியத்தில் இறந்தவர்கள் உயிர்த்தெழும் போது அவர்கள் மாட்சியுடன் இருப்பார்கள் என்று வாசிக்கின்றோம். "மனித இயல்பு கொண்ட உடலாய் விதைக்கப்படுவது ஆவிக்குரிய உடலாய் உயிர் பெற்று எழுகிறது"

(காண்க 1கொரி15:44).

இந்த மாட்சியான நிலையானது நாம் இவ்வுலகத்தில் கொண்டுள்ள அமைப்போ, உருவமோ செயற்பாடோ இன்றி இருப்போம் என்பதைக் குறிக்கின்றது. இதைத் தான் ஆண்டவர் இயேசுவும் உயிர்தெழுந்தவர்கள் விண்ணகத்தூதர்களைப் போல இருப்பார்கள் எனக் கூறுகின்றார்.

"உயிர்த்தெழுந்தவர்களுள் யாரும் திருமணம் செய்துகொள்வதில்லை: அவர்கள் விண்ணகத்தூதர்களைப் போல் இருப்பார்கள்". (காண்க மத்22:30). நாம் உயிர்த்தெழும் பொழுது எவ்வாறு இருப்போம் என்பதைப் புனித பவுல் நிலத்தில் விதைக்கப்பட்டு முளைக்கும் பயிருக்கு ஒப்பிட்டு விளக்குகிறார். ஒரு விதையை நாம் விதைக்கும் போது அந்த விதையானது முளைக்கும் போது வேறு ஒரு உருவத்தைப் பெறுகின்றது. அதுபோல நாமும் உயிர்த்தெழும் பொழுது வேறு ஒரு உருவத்தை, தோற்றத்தை கொண்டிருப்போம் எனக் கூறுகிறார். இதைத் தான், திரு அவைத் தந்தையர்களும் கற்பிக்கின்றனர். அதாவது இறந்தவர்கள் உயிர்த்தெழும் பொழுது வேறு ஒரு உடலைப் புதிதாகச் சேர்த்துக் கொள்வதில்லை மாறாக அந்த உடலானது வேறு விதமாக உயிர்த்தெழுகிறது என கூறுகின்றனர். திரு அவையின் மறைக்கல்வி (இல.1000) உயிர்த்தெழுதலைப் பற்றிப் பேசுகின்ற போது, நற்கருணையில் ஆண்டவரின் மாட்சிமிக்க பிரசன்னத்தை ஒப்பிட்டுப் பேசுகின்றது. அதாவது நற்கருணையில் இருக்கும் ஆண்டவரின் பிரசன்னத்தை அவரது மனித உடலின் பிரசன்னத்தோடு பார்ப்பதில்லை மாறாக உயிர்த்த ஆண்டவர் இயேசுவின் பிரசன்னத்தின் மாட்சியோடு நாம் நம்புகின்றோம்.

இப் படிப்பினைகளை எல்லாம் ஒட்டுமொத்தமாக நாம் அலசி ஆராய்கின்ற போது, இறந்தவர்கள் நிச்சயமாக உயிர்த்தெழுவார்கள், அவர்கள் உயிர்த்தெழும் பொழுது மனித இயல்புக்குரிய தோற்றத்தையோ செயற்பாடுகளையோ கொண்டிருக்க மாட்டார்கள் மாறாக, அவர்கள் ஆவிக்குரிய இயல்போடு இருப்பார்கள் என்று தெளிவாகக் கூற முடியும்.

**எவ்வாறு உயிர்தெழுந்தவர்கள் எல்லோரும் தண்டனைத் தீர்ப்பிற்கு முகம் கொடுப்பார்கள்?**

உயிர்த்தெழுந்தவர்கள் எல்லோரும் தண்டனைத் தீர்ப்பிற்கு முகம் கொடுப்பார்கள். நாம் இவ்வுலகில் வாழ்ந்த போது எவ்வாறு வாழ்ந்தோம் என்பதற்கேற்ப ஆண்டவர் தாமே தீர்ப்பை வழங்குவார். உலகம் முடிவில் ஆண்டவர் இயேசு வாழ்வோருக்கும் இறந்தோருக்கும் நடுவராக வரும் போது நேர்மையாளருக்கும் நேர்மையற்றோருக்கும் இந்தத் தீர்ப்பை வழங்குவார் என்று கத்தோலிக்க திருஅவையின் மறைக்கல்வி கூறுகின்றது.

இவ்வாறு தண்டனைத் தீர்ப்புப் பெற்றவர்கள் மூன்று நிலைகளாகப் பிரிக்கப்படுவர். விண்ணகம், நரகம், தூய்மைபெறும் நிலை (உத்தரிப்பு இடம்). இதிலே நன்மைசெய்தோர் விண்ணகத்திற்குச்செல்வர். தீமை செய்தோர் நரகத்திற்குச் செல்வர் என்பதை நாம் தெளிவாக அறிந்திருக்கின்றோம். ஆனால் இந்தத் தூய்மை பெறும் நிலைக்கு யார் தீர்ப்பிடுகிறார்கள் என்று கேள்வி கேட்பது பொருத்தமாகும். தூய்மை பெறும் நிலை என்பது கடவுளோடு நட்புறவில் இறந்து நிலைவாழ்வு உறுதி செய்யப்பட்டு இருந்தாலும் விண்ணகப் பேரின்பத்தை அடைவதற்கு முன் தங்கள் பாவங்களுக்குப் பரிகாரம் செய்யும் நிலையாகும். அதாவது இந்த நிலையில் இருப்பவர்கள் நரகத்திற்கும் விண்ணகத்திற்குமெனத் தீர்ப்பிடப் படாமல் விண்ணகத்திற்குச் செல்லக் காத்துக் கொண்டிருப்பவர்கள்.

**இறந்தவர்கள் தங்கள் பாவங்களுக்கு எப்படிப் பரிகாரம் செய்யமுடியும்?**

கத்தோலிக்கர்களாகிய நாம் இறைவனோடு மட்டுமன்றி எம் அயலவரோடும் ஒன்றித்து வாழ்வதே எமது இயல்பாக இருக்கின்றது. இந்த ஒன்றித்த வாழ்வு வாழ்வோரோடு மட்டுமின்றி இவ்வுலகை விட்டுச்சென்றவர்களோடும் அந்த ஒன்றித்த உறவின் நிலை தொடர்கிறது. இந்த ஒன்றித்த நிலையையே புனிதர்களின் சமூக உறவு எங்களுக்குத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. அதேபோல இறந்தவர்கள் தங்களுக்காக பாவப் பரிகாரம் செய்ய முடியாது ஆனால் இவ்வுலகில் திரு அவையோடு பயணிக்கும் நாம் இறந்தவர்களுக்காகப் பாவப் பரிகாரம் செய்ய முடியும். அது எவ்வாறெனில் அவர்களுக்காக இறைவேண்டல் செய்தல், திருப்பலி ஒப்புக்கொடுத்தல், ஏழைகளுக்கு உதவுதல், பாவ மன்னிப்பு அருள் பலன்கள், தவ முயற்சிகள் ஊடாக தூய்மைபெறும் நிலையில் இருக்கின்றவர்கள் முடிவில்லாத வாழ்வு பெற நாம் உதவி செய்ய முடியும். கத்தோலிக்கர்களாகிய நாம், இறந்தவர்களுக்காகச் சில காரியங்களைப் பாரம்பரியமாகச் செய்துகொண்டிருக்கிறோம். நாம் இறந்தோருக்கான திருப்பலியில் பங்குபெறுகின்ற போது அவர்களுக்காக மன்றாடுவதோடு நின்றுவிடாமல் நாமும் ஒரு நாள் இறப்போம், நாமும் உயிர்த்தெழுவோம், எமக்கும் தண்டனைத் தீர்ப்பு இருக்கின்றது என்ற உண்மையை நாம் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும்.

எப்படியும் வாழலாம், எதுவும் செய்யலாம் என்ற எண்ணத்தோடு வாழ்ந்தால், நாம் எம் இறை நம்பிக்கையின் கனவு இல்லமாகிய விண்ணகத்தை அழிக்கின்றோம். நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் தண்டனைத் தீர்ப்பு நிச்சயமாக இருக்கின்றது. எனவே விண்ணகக் கனவு இல்லத்தை நாம் உரிமையாக்கிக் கொள்ள வேண்டுமென்றால் அதற்கு ஆயத்தம் செய்யும் முகமாக, தரப்பட்டிருக்கும் இவ்வுலக வாழ்வை ஆண்டவரின் நற்செய்திக்கேற்ப அமைத்துக்கொள்வது எமது கடமையாகும். மனிதராகிய எமக்கு இறைவனால் முழுச் சுதந்திரம் தரப்பட்டிருக்கின்றது. இந்த சுதந்திரத்திலேயே நாங்கள் தீர்மானங்களை எடுக்கின்றோம். நாம் எடுக்கின்ற தீர்மானங்களுக்கு நாமே பொறுப்பானவர்கள். எனவே இறந்தோருக்காக மன்றாடுவதோடு விண்ணகம் நோக்கிப் பயணிக்கும் எங்களுக்காகவும் எங்கள் குடும்பங்களுக்காகவும் மன்றாடுவோமாக.

**"இருக்கிறதே ஒரு வாழ்க்கை, அத செமயா வாழ்ந்திட்டு செத்திடனும்" என்று பலர் சொல்வதை நான் கேட்டிருக்கின்றேன். இறந்த பின் வாழ்வு இருக்கிறதா என்ற வினாவிற்கு ஒருசிலர் "ஆம்" என்றும் ஒருசிலர் "இல்லை" என்றும் வேறு சிலர் "தெரியாது" என்றும் வாதாடுகின்றனர். ஆனால் ஒரு கத்தோலிக்கனாக இறந்த பின் வாழ்வு உண்டு என நம்புகிறேன். இதைத் தான் எமது நம்பிக்கை அறிக்கையிலும் "இறந்தோரின் உயிர்ப்பையும் வரவிருக்கும் மறு உலக வாழ்வையும் எதிர்பார்க்கின்றேன்" என்று ஆணித்தரமாக அறிக்கையிடுகின்றோம்.**



# விழித்திருப்பவன் காலத்தை வென்றவன்

திருப்பலிகளும் ஏனைய ஆலயம் சார்ந்த திருவிழாக்களும் அற்ற. எமது கத்தோலிக்க நம்பிக்கையை அடியோடு சரிக்கின்ற சூழல். எம்மைப் புடமிடுகின்ற, புண்படுத்திக் குணப்படுத்துகின்ற இறை வல்லமையின் நிகழ்வாகிய கொரோனாவால் ஏற்பட்டுள்ளது.

இவ்வேளையில் தான் எமது வீட்டுத் திருச்சபை பலமடைய வேண்டும். எம் நாட்டின் புனிதர் ஜோசவ்வாஸ் வருவதற்கு முன்பு ஏறக்குறைய 30 வருடங்களும், அவர் வந்த பின்பு இலங்கை முழுவதும் அடிக்கடி சென்று பணிபுரிய இயலாத நிலையில் ஏறக்குறைய 30 வருடங்களும், வீட்டுத் திருச்சபையாகவே திருச்செபமாலையைக் கையிலெடுத்துச் செபித்துத் தமது கத்தோலிக்க நம்பிக்கையைக் காத்துக்கொண்டனர். நமது முன்னோர். இன்றைய நிலையில் வீட்டுத் திருச்சபையாக அன்னை மரியாவிடம் கையேந்திக் குடும்பச் செபமாலை. குடும்பச் செபம் செபித்து நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளும் "அன்றைய" சாட்சிய வாழ்வு பெரும்பாலும் இல்லையென்றே சொல்லலாம்

எம்மைப் புடமிடும் கொரோனாவிற்குப் பயந்து தெருக்கள், வீடுகள், சந்து பொந்துகளில் நின்று உலக நடப்புக்களைப் பற்றிக் கதைத்துக் கொண்டும் இதை நீக்கிவிடும் படி இறைவனிடம் கேட்டும் அவரைக் கட்டுப் படுத்தப் பார்க்கிறோமே ஒழிய மரியன்னையின் மன நிலையில் உமது சித்தம் நிறைவேறட்டும், எது வந்தாலும் ஏற்கும் மனநிலையை எமக்குத் தாரும் என்று செபிப்பது தற்போது குறைவெனலாம். எனவே நாம் விழிப்படைய வேண்டும்.

இறைமகன் இயேசுவின் பிறப்பிற்கு விழிப்போடு காத்திருந்து எம்மைத் தயார்படுத்தும் காலமே, திரு-வருகைக் காலமாகிய நான்கு ஞாயிறு தினங்களை உள்ளடக்கிய நான்கு வாரங்கள் முறையே எதிர்நோக்கு, அமைதி, மகிழ்ச்சி, அன்பு மறையுண்மைகளைத் தியானிக்கின்றோம். இதற்கு உதவியாகத் தரப்படும் இறை வார்த்தைகள் முதல் இரண்டு வாரங்களிலும் இயேசுவின் இரண்டாவது வருகை பற்றியும் அடுத்த இரண்டு வாரங்களிலும் முதலாவது வருகை (பிறப்பு) பற்றியும் எடுத்துக் கூறுகின்றன. அதே வேளையில் இதற்கு ஆயத்தமாகப் பொதுக்கால இறுதி வாரங்கள், ஆண்டவரின் நாள், உலக முடிவு, உயிர்த்தெழுதல், மானிட மகன் வருகை, இறுதித்தீர்ப்பு, நிலையான வாழ்வு அல்லது நிலையான தண்டனை போன்ற இறுதிக்கால நிகழ்வுகள் பற்றிச் சிந்திக்கின்ற காலமாகவும் அமைகின்றன.

ஒரு கிறிஸ்தவனின் வாழ்வு முழுவதுமே திருவருகைக் காலமாகும். இயேசுவின் பிறப்பை எதிர்நோக்கும் காலமாக இக்காலம் நமக்குத் தரப்பட்டாலும் ஒரு கிறிஸ்தவன் தன் வாழ்வு முழுவதையும் விழிப்புடன் வாழவேண்டிய நாளாந்த நிகழ்வாகவும் இது தரப்படுகின்றது. ஏனெனில் விழித்திருப்பவன் மட்டுமே காலத்தை வென்றவனாகின்றான். எப்படி நாம் விழித்திருப்பது?

எம்மில் பலர் கடந்தகால நிகழ்வுகளை மனதில் கொண்டு வருந்துகின்றோம். வருங்கால நிகழ்வுகளை எதிர்நோக்கத் துணிவின்றிப் பயப்படுகின்றோம். இவற்றையெல்லாம் "நான் ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே எனக்கு நிகழட்டும் (லூக் 7.38), "என் விருப்பப்படியல்ல, உம் விருப்பப்படியே நிகழட்டும் (மத் 26:39) என்று இறைவன் கையில் நம்பிக்கையோடு ஒப்படைத்து விட்டு, இலாபநட்டங்களையோ, வெற்றி தோல்விகளையோ கண்டு வருந்தாமலும் பயப்படாமலும் நிகழ்காலத்தில் இடம்பெறுவதை, வருவது வரட்டும்

**அருட்தந்தை கு. யே. அன்ரனிபாலா**

என்று முழுமனதோடும், தற்துணிவோடும் நிறைவான மகிழ்ச்சியோடும் ஏற்று வாழ்வதே விழிப்புடன் இருப்பதாகும்.

ஏனெனில் ஒவ்வொரு கணத்தையும் (வினாடி) வாழாவிட்டால் இறந்த காலமாகி, பதட்டமடைந்து அமைதியை இழந்து விடுவோம். இவ்வுலகில் விழிப்புடன் இல்லாதவன் முட்டாளாகின்றான். இவ்வுலக வாழ்வென்பது மறு உலகிற்கான தயாரிப்பாகும். ஏனெனில் திரையில் படம் தொடங்காதவரை அதற்கு முடிவு இல்லை. ஆனால் தொடங்கியவுடன் நிச்சயம் ஒரிரு மணித்தியாலங்களில் முடிவு வந்து தான் ஆக வேண்டும்.

இறைவன் எம்மை முன்குறித்து வைத்துத், தேர்ந்தெடுத்து, அழைக்கின்றார். (எபே 1:4-6,8-9,18-19, 4:1-4, 6:10-19). உலகம் படைக்கப்படும் போதே முன்குறித்து வைத்தபடி தேர்ந்தெடுத்த பெற்றோருக்கு அவர் அவர்களுடைய இடத்தில் பிறக்கும்படி அழைப்பைக் கொடுக்கின்றார். இந்த உடல் என்னும் சட்டையைப் பெறுமாறு அழைப்பைப் பெற்றுக்கொள்ளும் ஆன்மா ஆகக்கூடியது 60 வருடங்கள் இவ்வுலகில் வாழப் போகின்றது. இப்பூமியில் வாழும் அழைப்பு முடிந்தவுடன் இச்சட்டை பிணமாகப் புதைக்கப்படுகின்றது. பிறந்த அடுத்த நாளே நாம் ஒரு நாள் இறந்ததற்குச் சமம்.

எனவே முதல் வருடத்தில் நாம் பிறந்த நாளை அல்ல, மாறாக ஒருவருடம் இறந்த நாளையே ஊருக்கு உலகிற்கு அறிவித்து எமது பெற்றோர் உறவினர் கொண்டாடுகின்றனர். எமது ஒவ்வொரு வருடமும் இறந்த நாள் "கொண்டாட்டமேயாகும்". பிறந்தால் இறக்கத்தான் வேண்டும் படத்தின் உச்சக்கட்டம். முடிவு வரப்போகிறது. இனி நிம்மதியாக இறைவனின் விண்ணக வீட்டிற்குப் போவோமா? அல்லது வேதனை நெருப்பிற்குள் செல்வோமா? எது செய்வதாக இருந்தாலும் இவ்வுலக வாழ்விலே தான் செய்ய முடியும். அதன் முன்போ பின்போ இயலாது.

கடந்த காலக் கண்டுபிடிப்புகளையும் மனிதனே கண்டுபிடித்தான். நிகழ்காலத்திலும் அவனே கண்டு பிடிக்கிறான். இனி வருங்காலமும் அவ்வாறானதே. எவ்வாறாயினும் ஒவ்வொரு பொருளோடும் ஒரு கையேடு (Cate logue) வழங்கப்படுகிறது. அதைப் படித்துப் பார்த்தே அப்பொருளை இயக்க முடியும். அல்லது அவ்விடயத்தை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் மனித உடல், உயிர், மனம், ஆன்மா அருளுயிர் (திருமுழுக்கில் சென்மபாவம் கழுவப்பட்டு ஆன்மாவில் பாதிக்கப்படும் இறை ஆவியின் அழியா முத்திரை) கொண்ட இந்த மனிதனுக்கு மட்டும், எந்த வைத்தியசாலைகளிலும் அவன்பிறக்கும்வேளைகையேடுஎதுவும்கொடுக்கப்படுவதில்லை இது தான் அனைத்து உறவுச் சிக்கல்களுக்கும் காரணம். அயலவருடனும் படைப்புக்களோடும் அன்றாடம் உரசித்தான் தனது உடல், உயிர் ஆன்மாவின் நோக்கம், கட்டமைப்புப் பற்றி அறிய முடியும். இவ்வாறு ஊகித்துத் தெரிந்து கொள்ள விழிப்புணர்வு தேவை. எமது கட்டமைப்பும் இயங்கு நிலையும் பற்றி நாம் புரிந்து கொள்ள முடியாததால் காலையில் எமது நாள் முடிவடைகின்றது. ஆனால் கிறிஸ்தவர்களாகிய எமக்கு எம்மைப் பற்றி அறிந்து கொள்ள இறைவன் தந்த அன்புக் கடிதமாகிய இறைவார்த்தையே அக்கையேடாகும். (எபி 4:12, திபா 119:105, யோவா 12, 47-50, எசா 55: 10-11)

எடுத்துக்காட்டாக ஒரு கைத்தொலைபேசியை எடுத்தால் அதன் வெளிப்பக்கமாகிய வன் பொருளே எமது உடல். அதன் மின்கலமே எமது உயிர். அதன் சிம் காட்டேஎமதுமனம். அதன்மென்பொருளேஎமதுஆன்மா "வைபை" யாகிய தொலைத்தொடர்பே இறைவனுடன் நாம் கொள்ளும் தொடர்பு (உறவு). எல்லாம் சரியாகப் பொருந்தவும் வேண்டும். அவ்வாறு பொருந்தினாலும் தொடர்பில் இல்லாத கைத்தொலைபேசி வீணாவது போன்றே இறை உறவில் இல்லாத மனிதனின் வாழ்வும் வீணானதாகிவிடும்.

எமதுஆன்மாவில்வெளிப்படுவதுபுத்திக்கூர்மையும் (intelligence) புரிதலும் (understanding) ஆகும். அறிவு (knowledge) என்பது வெளியில் இருந்து நாம் எமக்குள் நாளாந்தம் ஐம்புலன்கள் ஊடாகப் போட்டுக் கொள்ளும் குப்பை கூளங்களாகும். இந்தச் சேகரிப்புகளின் பதிவுகளுக்கு ஏற்பவே நாம் தப்பான முடிவுகளை எடுக்கின்றோம். இவையே இரத்த அழுத்தம், சீனி வருத்தம், இதயம் படபடப்புகளுக்குக் காரணமாகின்றன. விழித்திருப்பவன் நிமிடத்திற்கு நிமிடம் குப்பைகளை வெளியேற்றி மனமாற்றமடைந்து அடிக்கடி நல்ல பாவ அறிக்கை செய்து வெறுமையாகித் தூய்மையடைகின்றான். எமது புத்திக் கூர்மை இறைய்ருளால் நிரப்பப் படும் போது எதிர்மறையான எண்ணங்கள் நீங்கி நேர்விதியான விளைவுகள் பெருகுகின்றன. இது எமது உடலில் சக்தியை, வலுவினைக் கூட்டி புரிதல் என்னும் பண்பினால் உலகை விளங்கிக் கொண்டு உற்சாகத்துடன் வீறுநடைபோட வைக்கின்றது.

இதுவே விழிப்புணர்வு ஆகும். ஏனெனில் விழிப்போடிருப்பவன் காலத்தை, நேரத்தைக் கடந்தவன், இறப்பைக் கடந்தவன். இதுவே பிறப்பு, இறப்பு அறுந்த நிலை. விரும்பாத விடயத்தை மனம் எதிர்க்கின்றது. அதுவே நரகமாகின்றது. மாறாக விரும்புகின்ற விடயத்துடன் மனம் ஒத்திசைவாகி அதுவே ஆனந்தமாகின்றது. எமது நம்பிக்கை ஆழமாகி அந்த ஒத்திசைவின் கருப்பொருள் இறைவனேயானால் அதுவே பேரானந்தமாகும். விழிப்புணர்வே புதிய பிறப்பு என்பதை உணர்ந்தவர்களாகக் காலத்தை வென்ற இயேசுவோடு இணைந்து நாமும் காலத்தை வென்றவர்களாவோம்.

# நான் பார்த்ததில் பிடித்தது



**அருட்பணி செ. அன்புராசா**

**நம் சிந்தனைக்கு**

" இவரோடு என்னால் இனிமேலும் வாழ முடியாது" என்று ஒரு பெண் வந்தாள். இவளைத் தொடர்ந்து "இதற்கு மேலும் இவளோடு இரு இருக்க முடியாது" என்று இவளது கணவன் வந்தான்.

இருவருடைய வாழ்க்கை அனுபவங்களையும் கேட்டுக்கொண்டு இருந்தவேளை தன் வளர்ப்பு நாய் றெமியும், பூனை சிமியும் ஒன்றின் மேல் ஒன்று பாய்ந்து ஒன்றையொன்று செல்லமாகக் கவ்விக் கடித்து, ஒன்றை விட்டு ஒன்று துரத்தி, ஒன்றின் மேல் ஒன்று விழுந்து விளையாடிக்கொண்டு நிற்பதை அவதானிக்கின்றார் நடுவர்.

இப்போது நடுவர் றெமியையம் சிமியையம் சுட்டிக்காட்டி "பாருங்கள் நாய் பூனை கூட எவ்வளவு செல்லமாகச் சேர்ந்து விளையாடுகின்றன!"என்கிறார்.

அப்பெண்மணியோ, "விளையாடுறதுக்குச் சரிதான்! குணத்த அறியவேணும் எண்டா கல்யாணத்தச் செய்து வைத்துப் பாருங்கள்"எனக் கூறி நின்றாள்.

இரு நெருங்கிய உறவுகளுக்கிடையில் விரிசல் ஏற்பட்டு அவ் விரிசல் மிகவும் மோசமடைந்து, ஒருவருக்கொருவர் முகம் கொடுக்கக்கூட முடியாத நிலையில், தினமும் சண்டையிட்டு வந்தால் அவர்களை நாயும் பூனையும் போல என உவமையாகச் சொல்வதுண்டு.

இத்தகைய மிக நலிவுற்ற உறவு விரிசல் இரு சகோதரர்களுக்கு அல்லது நண்பர்களுக்கு இடையில் நிலவினாலும், கணவன் மனைவிக்கு இடையில் நிலவும் பிணக்கை உறவு விரிசலைத்தான் பொதுவாக மேற்சொன்ன உவமையினால்: "நாயும் பூனையும் போல" என வர்ணிப்பது வழக்கம்.

இந்த உவமை நாளாந்த அனுபவத்திலிருந்து பெறப்பட்டது. அதாவது நாய்க்கும் பூனைக்கும் பொதுவாக ஒத்துப்போவதில்லை. எவ்வாறு கீரிக்கும் பாம்புக்கும் ஒத்துப் போகாததை கீரியும் பாம்பும் போல என்று கூறுவார்களோ அதுபோலவே நாயும் பூனையும் போல எனப் பெரியோர்கள் கூறி வந்திருக்கின்றார்கள்.

ஆனால், பல நாட்களாக நான் அவதானித்து வந்த ஒரு விடயம் மேற்குறிப்பிட்ட அனுபவத்தை மறு-பரிசீலனை செய்ய வைத்திருக்கின்றது.

நாயும் பூனையும் ஒன்றோடு ஒன்று எவ்வளவு அன்னியோன்னியமாக இருக்கின்றன என்பதைஒளிப்படமாகவும் நிழற்படமாகவும் சில நாட்களாகப் பதிவு செய்தேன்.

எவை எவை ஒன்றுக்கொன்று எதிரிகள் என்று நினைத்திருந்தோமோ அவை இன்று அன்னியோன்னியமாகி விட்டன. ஆனால் நம் சகோரர் சகோதரிகளுக்கிடையிலான உறவிலும், குறிப்பாக அநேகமான குடும்பங்களில் கணவன் மனைவிக்கிடையிலான உறவிலும் என்ன நடந்து கொ... ண்...டி..ரு...க்..கி..ன்..ற..து..

## காவலன் கலசம்

# "அடிமைத்தனம்"

**முன்னுரை**

'என்னடா, திருவருகைக்' காலம் வந்துவிட்டது. இவன் பாவி அடிமைத்தனத்தைப் பற்றி எழுத முனைகிறானே!' என்று காவலன் வாசகர்கள் நினைக்க லாம். அந்த நினைப் பில் ஒரு நியாயம் இல்லாமல் இல்லை. அண்மையில் ஒரு சிறு நிகழ்வு நடந்தது. அந்த நிகழ்வு என்னைக் கொஞ்சம் உலுப்பியது. அதன் விழைவுதான் இந்தக் கட்டுரை.

**களப்பயிற்சி**

நான் திருநிலைப்படுத்தப்பட்ட பின்னர். குருமடப் படிப்பையும் பயிற்சியையும் (இப்பொழுது தான் இந்தப் பயிற் சியை உருவாக்கம் என்று அழைப்பது வழக்கத்தில் வந்தது. அந்தக் காலப் பயிற்சிக்கும் இந்தக் கால உருவாக்க காலத் திற்குமிடையே உள்ள வேறுபாடென்ன? இதற்கு பதில் சொல்வதால்தான். ஒரு கட்டுரைத் தொடர் வேண்டும். இவ்வருடம் நான் ஆங்கிலத்தில் எழுதிய Formation : in the context of the New World View என்ற நூல் ஓரளவு பதில் சொல்லும்). முடித்துக் கொண்டு. களப்பயிற்சிக்காக (ஒரு வகை liternship) மருதானையில் உள்ள பாத்திமா கோவிலுக்கு அனுப்பப்பட்டேன். என்னுடன் இன்னமும் ஐந்து குருக்கள் இருந்தார்கள். அந்த ஆறு மாதக் களப் பயிற்சிக்காக நான் இன்றும் நன்றியுடையவனாக இருக்கின் றேன். ஏழு வருடங்களாக ஓர் அடைபட்ட செயற்கையான சூழலில் நான் ஒரு மனிதனாக வளர்ந்தேன் என்று துணிய முடியாது. மருதானைக்கு வந்த பின்னரே ஒரு யதார்த்த மான உலகைக் கண்டேன். மருதானை புனித பாத்திமா கோவிலுக்கு வருவோர் பல விதம். படித்தவர்கள் படியாதவர்கள்; செல்வந்தர். ஏழைகள். அழகான சொகுசுக் கார்களில் வருவோர். கால் நடையாகவே பல மைல்கள் நடந்து வருவோர். அள்ளிக் கொடுத்தவர்கள். கிள்ளிக் கொடுத்தவர்கள். எதையுமே கொடுக்க முடியாமல் தவித்தவர்கள். கொடுப்பதற்குப் பதிலாகப் பெறுவதற்கு வந்தவர்கள் அனைவரையும் பார்த்தேன். இவர்களுடன் உரையாடினேன். இவற்றால் நான் பெற்ற அனுபவம் இன்னமும் பசுமரத்தாணி போன்று நினைவில் உள்ளது.

**"Alcoholic Anonymous"**

இந்தக் களம் பயிற்சியின் போதுதான், குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்கள் வாரந்தோறும் எவ்வித விளம்பரமும் இன்றிக் கூடுவதைப் பார்த்தேன். இவர்கள் தங்களைத் தாங்களே "Alcoholic Anonymous" என்பார்கள். இவர்களில் சிலருடன் (உரையாடியதில். இது ஓர் அனைத்துலக இயக்கம் என்பதைப் புரிந்து கொண்டே இவர்களைப் பற்றி அறிய வேண்டும். இந்தக் கூட்டங்களில் பங்கு பெறுவதால் இவர்களுக்கு ஏதாவது நன்மை உண்டா? இவற்றிற்குப் பதில் தேட வேண்டும் என்ற ஓர் ஆவல் இருந்தது. ஆயினும். அதைத் தொடரவில்லை. இது எனது பலவீனங்களில் ஒன்று. அண்மையில் நடந்த நிகழ்வு அந்தப் பழைய ஆவலை மீண்டும் தூண்டியது.

**Addiction / அடிமைத்தனம்**

ஒரு பழக்கத்திற்கு அடிமையாகுதலே. இந்த அடிமைத்தனம் ஆயினும். addiction என்ற ஆங்கிலச் சொல்லிற்கு. ஒரு பழக்கத்திற்கு அடிமையாகுதல் என்ற மொழி பெயர்ப்பில் ஓரளவு தெளிவிருப்பினும் அந்தச் சொல் லின் முழுமையான பொருளைத்தரவில்லை. தொடக் கத்தில் மதுவுக்கு அடிமை என்று தான் நான் பொருள் கொண்டேன். ஆனால் addiction என்ற சொல்லின் வரைவிலக்கணத்தையும். அதன் விரிவான விளக்கத் தையும் ஆராயும் பொழுது. இது மது அருந்தும் பழக் கத்திற்கு மட்டுமல்ல. இன்னும் பல்வேறு வகையான பழக்கங்களுக்கு அடிமையாகலாம் என்ற உண் மையை உணர்ந்து கொண்டேன்.

உதாரணமாக ஓர் நபருக்கு. போதைக்கு. பாலியல் சம்பந்தப்பட்ட செயல்களுக்கு. கற்பனைக்கு. எண்ணங்களிற்கு. கருத்துக்களிற்கு மனித புலன்களுக்கு எட்டாதவற்றிற்கு சமூகம் கொடுத்த சாயலுக்கு (Images). கணனி விளையாட்டுக்களுக்கு. இணையத்தளத்திற்கு. புகைத்தலுக்கு. வெற்றிலை போடுவதற்கு. கோப்பி தேநீர் அருந்துவதற்கு அடிமைப்படுதல். என்று இந்தப் பட்டியல் நீளுகின்றது. இவ்வழி நின்று பார்க்கும் பொழுது நாமனைவருமே ஏதோ ஒன்றிற்கு அல்லது பலவற்றிற்கு அடிமைப்படுகின்றோம். இக்கூற்று கசப்பாக இருப்பினும். ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இது தான் யதார்த்தம்.

**வரைவிலக்கணம்**

சுதந்திரமான மனித ஆசையை (desire) ஒரு வரையுறைக்குள் அடக்கும் ஒரு கட்டாய (Compulsive) பழக்கத்தையே அடிமைத்தனம் (addiction) என்று வரைவிலக்கணம் தந்துள்ளார்கள். உளவள சிகிச்சை செய்பவர்கள். ஒரு குறிப்பிட்ட பொருளுடன் (an object) என்னை இணைத்து (attachment) அன்றேல் அந்தப் பொருளுடன் என்னை அறைந்து கொள்வதாலேயே இந்த அடிமைத்தனம் ஏற்படுகின்றது. இந்தப் 'பொருள்' என்ற சொல் மேலே குறிப்பிடப்பட்ட பட்டியலில் உள்ள அனைத்தையுமே உள்வாங்கும்.

இந்த வரைவிலக்கணத்தில் 'பழக்கம்' (behavior) என்ற சொல் முக்கியமானது. ஏனெனில். பழக்கம் ஒரு நடவடிக்கையை (behavior) சுட்டிக் காட்டுகின்றது. ஓர் ஆசையுடன் அதாவது அந்த ஆசை சுட்டிக்காட்டும் பொருளுடன் என்னை இணைத்துக் கொள்வது அடிமைத்தனத்தின் அடித்தளம். ஆகவே. என்னை ஓர் பொருளுடன் இணைத்துக் கொள்வதற்கும் அடிமைத் தனத்திற்குமிடையே ஒரு தொடர்புண்டு. நீண்ட கால மாக ஆசைப்பட்டு அந்த ஆசைப்பட்ட பொருளுடன் என்னை இணைத்து அடி மையாக்கி பின்னர் அதிலி ருந்து நான் விடுபட்டாலும். மனம் அல்லது மூளை பலகாலமாக இருந்த இணைப்புக்களில் அன் றேல் பிடிப்புகளில் இருநது விடுபட்டு விட்டது என்று துணிய முடியாது.


கற்பனை உலகில் வாழும் எனது அடிமைத்தனத்தில் நான் வாழுகின்றேன் என்பதை உணர்ந்து. அதிலிருந்து பெருமளவில் நான் விடுதலை அடைந்தும். அவ்வப்பொழுது அந்தப் பழைய பழக்கத்தில் விழுந்து விடுவதையும் நான் உணர ஆரம்பித்துள்ளேன்.

இவ்விடத்தே இன்னோர் விடயத்தையும் குறிப்பிட விரும்புகின்றேன். மதுப்பழக்கத்திற்கு அடிமை என்று கூறும் பொழுது. அதை ஓர் தார்மீகப் பிரச்சினை யாகப் பார்ப்பதை விட. ஓர் இரசாயனச் (Chemical) சிக்கலாகப் பார்ப்பது உதவியாக இருக்கும். ஆனால், இது எல்லா அடிமைத்தனத்திற்கும் பொருந்துமா என்ற ஒரு கேள்வி. ஆய்வுக்குரியது.

எனது தந்தை மதுவுக்கு அடிமையாகி இருந் தால். நானும் மதுவுக்கு அடிமையாகக் கூடிய வாய்ப்புக் கள் அதிகம். அதேவேளை, என் தந்தை மதுப் பழக்கத் திற்கு அடிமையல்ல. ஆனால் அவரது தந்தை மதுப் பழக்கத்திற்கு அடிமையாக இருந்தால் நானும் அந்தப் பழக்கத்திற்கு அடிமையாகும் வாய்ப்புக்கள் உண்டு. இதற்குக் காரணம் மரபணுக்கள் என்பது சில ஆய்வாளர் களின் கருத்து.

**வெறுப்புகள் - (Aversion)**

வெறுப்புக்களுக்கும் நான் அடிமையாகலாம். நன்மையான அடிமை தீமை யான அடிமை என் றில்லை. ஆசையின் மறுபக்கம் விரட்டல் (Repulsion). ஆசை ஒரு பொருளை நோக்கி கட்டாயமாக ஈர்ப்பது போல. ஒரு விரட்டலுக்கும் நான் கட்டாய ஈர்ப்புக் கொண்டு அதற்கு அடிமையாகலாம். எனக்குப் பிடிக்காத ஒன்றிற்கு. நான் பயப்பிடும் ஒன்றிற்கு .. பயங் கள் (Phobias), தப்பெண் ணங்களுக்கு. இன மத மொழி வெறிகளுக்கு.




பாலியல் வெறுப் புக்களுக்கும், முக்கியமாக உண்மையற்ற உளநோய்க்கு (anorexia nervosa) நான் அடிமை யாகலாம். எந்த அடிமைத்தனமும் நல்லதல்ல. எந்த இணைப்பும் (attachment) நல்ல தல்ல. சில கூடிய அழிவைத்தரும், ஒட்டுமொத்தமாகப் பார்ப்போமானால் அனைத்து அடிமைத்தனங்களும் அழிவுடையவே.

சுதந்திரமாக அதாவது அகச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தி. அதற்கு ஒரு வரையறை கொடுத்து ஒரு பொருளுடன் என்னை அடிமைப்படுத்துவது எனது தேர்வுகளை (choices) எனது ஆற்றல்களை மட்டுப்படுத்துவது இந்த 'அடிமைத்தனம்'. சுதந்திரமாக ஒன்றுடன் இணைவது அன்பினால். கட்டாயத்தில் ஒன்றுடன் இணைவது அடிமைத்தனத்தினால்.

(தொடர்ச்சி 10ம் பக்கம்)




**(சென்றவாரத் தொடர்ச்சி...)**

**ஒருமைப்பாடு (uniformity)**

மேலே குறிப்பிட்ட பல திருத்தங்களை நிறைவேற்றுவதற்கு நிர்வாகத்திலும், செயற் படுத்தலிலும் நாடு முழுவதிலும் ஒரு ஒரு மைப்பாட்டைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**திருமணம்:-**

கத்தோலிக்கர்களுக்கிடையிலான திருமணம் பரிசுத்த ரோமன் கத்தோலிக்கச் சடங்கு முறைக்கேற்ப நிறைவேற்றப்பட்டு திருப்பலியில் மணமக்களுக்குத் திருமணத் தம்பதியருக்கான விசேட ஆசீர் வழங்கப்படு கின்றது. கத்தோலிக்க முறைப்படி திருமணம் முடிக்காது கூடி வாழ்பவர்களது திரு மணத்தை ஒழுங்காக்கும் போது அவர்களது செயல் கண்டனத்திற்குரியதும் பாவமானதும் என்பதனைக் காட்டும் முகமாக அத்திருமணம் பீடத்திற்கு அருகாமையில் வைத்து நடத்தப்படு வதுமில்லை, அத்தம்பதியருக்கு ஆடம்பர திருமண ஆசீர் வழங்கப்படுவதுமில்லை. இந்த நடைமுறை பத்து பதினொரு வருடங் களுக்கு முன் அறிமுகப்படுத்தப்பட்டது. எனது நினைவின் படி ஆயர் பெற்றக்கினி ரோமைத் திருப்பீடத்தின் ஆலோசனை யைப் பெற்று இந்த நடைமுறையில் மாற் றம் எதனையும் கொண்டுவரவில்லை.

**இடம் பெற்று வரும் சீர்திருத்தங்கள்**

16 வருடங்களாக அதாவது ஐரோப்பிய மறைபணியாளர்கள் வடக் கிற்கு வரத் தொடங்கியதிலிருந்து வடக்குத் திருத்தூது மாவட்டம் முன்னேற்றம் கண்டிருக்கின்றது என்பது வெள்ளிடை

**அருட்பணி S.V.B. மங்களராஜா**

மலை. அத்துடன் இனி வரும் காலத்தி லும் இம்முன்னேற்றம் தொட ரும் என நம்பலாம். இடம்பெற்றுவரும் சீர்திருத்தங் களை இங்கு சுட்டிக்காட்டலாம்.

முன்னர் இங்கு 7 அல்லது 8 மறைப் பணியாளர்கள் தான் பணியாற்றிக் கொண்டிருந்தனர். இப்போது (1861ல்) இத் திருத்தூது மாவட்டத்தில் 23 மறைப் பணியாளர்கள்....


*(தொடரும்...)*

## இடைவெளி

கடவுளுக்கும் நமக்கும் உள்ள இடைவெறி எவ்வளவு என்று ஒருவர் கேட்க. அதற்கு அறிஞர் ஒருவர் "என்னுடையது என்று நீ எதையெல்லாம் எண்ணுகிறாயோ அதையெல்லாம் எழுதிக்கொண்டே போ, அந்தப் பட்டியல் எவ்வளவு நீளம் ஓடுகிறதோ அவ்வளவு தூரம்தான் நமக்கும், கடவுளுக்கும் உள்ள தூரம்" என்றார். "ஒரே கருத்தை மட்டும் நினைத்துக்கொள். அந்த ஒரு கருத்தையே உன் வாழ்க்கையாக்கு. அந்த நினைவை ஒட்டியே வாழ்ந்து வா. மூளை, தசைகள், நரம்புகள் அனைத்திலும் அந்த ஒரு கருத்தே நிலைத்திருக்கட்டும். அதுதான் உன்னை வெற்றிக்கு அழைத்துச் செல்லும்" என்பார் சுவாமி விவேகானந்தர். "எதனை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய்" என்பது உண்மையிலும் உண்மை.

# “ஒடுக்கப்படும் மக்களின் குரலாகவே எனது படைப்புக்கள் இருந்தன”

## கலைஞர் வி.ஜெகநாதனுடனான நேர்காணல்



உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயப் பங்கினைப் பிறப்பிடமாகக் கொண்ட விசுவாசம் ஜெகநாதன் அவர்கள், சிறந்த நடிகன், நாடக ஆசிரியன், நெறியாளன் புனைகதை எழுத்தாளன், கவிஞன் என பன்முக ஆளுமைகளைக் கொண்டவர். கவிதை, நாடகம் எனப் பல நூல்களை வெளியிட்டிருப்பவர். அது மட்டுமன்றி தனது எழுத்துக்களாலும், செயற்பாடுகளாலும் சமூக விடுதலைக்காகப் பாடுபடும் சமூகப் போராளி. அவரது அனுபவங்களைப பகிர்ந்து கொள்வதில் இன்றைய கலைக்காவலன் மகிழ்வடைகின்றது.

**காவலூர் யோவான்**

**கேள்வி : பலதுறைக் கலைஞனாக விளங்கும் உங்களது கலைத்துறைப் பிரவேசம் எவ்வாறு அமைந்தது.?**

பதில்: எனது தந்தையார் விசுவாசம் ஒரு இசைக்கலைஞன் ஆர்மோனிய வித்துவான். அவரது இயல்பு எனக்குள் கலை ஆர்வத்தினைத் தந்திருக்கலாம். அதனால் சிறிய வயதில் இருந்தே என்னிடம் கலை சார்ந்த ஆற்றல்கள் இருந்திருக்கின்றன. உரும்பிராய் றோக.வித்தியாலயத் தில்தான் நான் ஆரம்பக் கல்வியைக் கற்றேன். 1966ஆம் ஆண்டளவில் கரவெட்டியைச் சேர்ந்த ஆசிரியர் வின்சன் அவர்கள் அங்கு எங்களுக்கு கல்வி கற்பித்தார். அவர் சிறந்த நாடகப் பிரியன் அவரது நெறியாள்கையில் 'கவரிவீசிய காவலன்' என்ற நாடகத்தில புலவர் மோர்சிகனாக முதன்முதலில் நடித்தேன். தொடர்ந்து அவரது சாக்கிரட்டீஸ் நாடகத்திலும் நடித்தேன். அதன் பின்னர் 1966 ஆம் ஆண்டில் சவிரி முத்துச்சுவாமி அவர்கள் (மரியசேவியர்) உரும்பிராய் பங்குத் தந்தையாக வந்த பின்னர் அங்கு திருமறைக் கலாமன்றத்தினை உருவாக்கினார். அவரோடு கோவிலே தஞ்சம் என நானும் என்னைப் போன்ற பல இளைஞர்களும் கிடந்தோம். அவருடனான எனது ஈடுபாடு தான் என்னைக் கலைத்துறையில் நிலைக்கச் செய்தது. அவரைத் தான் எனது 'கலைக் குரு' என்று சொல்வேன்.

**கேள்வி: திருமறைக் கலாமன்றத்தில் உங்களது பங்களிப்பு எவ்வாறு இருந்தது?**

பதில்: உரும்பிராயிலே பல நாடகமுயற்சிகளை அடிகளார் மேற்கொண்டார். அப்போது சுன்னாகம், ஏழாலை, சூறாவத்தை குளமங்கால் மல்லாகம் எனப் பங்குகள் உரும்பிராயுடன் இணைந்திருந்தன. ஆரம்பத்தில் திருப்பாடுகளின் காட்சிகள் தான் மேடையேயேற்றப்பட்டன. பின்னர் விவிலிய நாடகங்கள், கூத்துக்கள், வானொலி நாடகங்கள், என பலவற்றையும் தொடர்ச்சியாக மேற்கொண்டார். பல பங்குகளையும் சேர்ந்த இளைஞர்களையும் ஒன்றிணைத்து அத்தகைய முயற்சிகளை மேற்கொண்டார் அவரது செயற்பாடுகளில் தொடரச்சியாக ஈடுபட்ட இளைஞர்களில் நானும் ஒருவனாக இருந்தேன். பல நாடகங்களில் முக்கியமான பாத்திரமாக நடித்தேன் குறிப்பாக கல்வாரியில் கடவுள், அன்பில் மலரந்த அமரகாவியம், சாவை வென்ற சத்தியன்..போன்ற திருப்பாடுகளின் நாடகங்களில் கைப்பாஸ் பாத்திரமாக அதிக தடவைகள் நடித்தேன். திருமறைக்கலாமன்றம் தயாரித்த முதல் வீடியோத் திரைப்படமான பலிக்களத்திலும் நானே கைப்பாசாக நடித்தேன். அன்று தொடக்கம் இன்று வரை திருமறைக் கலாமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் நான் இடையில் சில காலம் அரசியல் பணிகளினால் இணைந்து செயற்பட முடியாமல் இருந்தாலும் அவ்வப்போது எனது பங்களிப்பினை வழங்கி வந்திருக்கின்றேன்.

**கேள்வி : உங்களது அரங்கச் செயற்பாடுகள் எவ்வாறு தொடர்ந்தன ?**

பதில்: திருமறைக் கலாமன்றத்தில் பெற்ற அனுபவங்களைக் கொண்டு தொடர்ந்து நானே சில நாடகமன்றங்களை உருவாக்கியும் நாடகங்களை எழுதியும் இயக்கினேன் மரியசேவியர் அடிகள் உரும்பிராயை விட்டுச்சென்ற பின்னர் 1974 அளவில் 'ஞானப்பிரகாசியார் நாடக மன்றம்' என்ற ஒன்றினை உரும்பிராயில் உருவாக்கி நாடகங்களை மேடையேற்றினேன். 1995 ஆம் ஆண்டுக்குப் பின் திருகோணமலையில் வாழவேண்டிய சூழல் ஏற்பட்டபோது அங்கு 'கீழைத் தென்றல் கலாமன்றம்' என்ற ஒரு அமைப்பினை உருவாக்கி அதனூடாகப் பல நாடகங்களை தயாரித்து மேடையேற்றினேன். இருபதுக்கும் மேற்பட்ட நாடகங்கள் அதில் தயாரிக்கப்பட்டது. ஒரு கலைக் குடும்பமாக அது வளர்ச்சிபெற்றது இன்றும் அவர்களுடன் எனக்குத் தொடர்பு இருக்கின்றது.

**கேள்வி : நீங்கள் எழுதி நெறிப்படுத்திய நாடகங்கள் பற்றிச்சொல்ல முடியுமா..?**

பதில்: தேவைகள் ஏற்பட்டபோதே நாடகங்களை எழுதவும் நெறிப்படுத்துவும் தொடங்கினேன் 1976 அளவில் உரும்பிராய் ஞானப்பிரகாசியார் நாடகமன்றத்திற்குத்தான் முதன்முதலில் நாடகங்களை எழுதி நெறிப்படுத்தத் தொடங்கினேன் 'கற்புக்கரசி' 'கைதியின் கதை', 'வெண்முகில்' போன்ற நாடகங்களை எழுதி நெறிப்படுத்தினேன். பின்னர் கொழும்பிலே நின்ற காலத்தில் 'புனித அன்னாள் பாடசாலை' 'நல்லாயன் பாட-சாலை' என்பவற்றிற்கு பல பாடசாலை நாடகங்களை எழுதி நெறிப்படுத்தினேன். அதன்பின்னர் திருகோணமலையில் கீழைத்தென்றல் கலாமன்றத்திற்காக பல நாடகங்களை நெறிப்படுத்தினேன். 'லக்ஷ்மி' என்ற நாடகம் ஒரு பெண்ணின் உண்மை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது அதனை பல மேடைகளில் மேடையேற்றினோம். அதேபோன்றே 'மலைகளைத் தகர்ப்போம்' என்ற நாடகம் விவிலியத்தினை அடிப்படையாகக் கொண்ட சமூக நாடகம், இதனையும் திருகோணமலையில் பல இடங்களில் மேடையேற்றினோம். பிள்ளை அழுத கண்ணீர் என்ற சிறுவர் நாடகத்தினை திருகோணமலையில் உள்ள எல்லாப் பாடசாலைகளிலும் மேடையேற்றினோம். மீண்டும் யாழ்ப்பாணம் வந்தபின்னர் பல நாடகங்களை எமது பங்கு இளைஞர்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் எழுதி மேடையேற்றி வந்தேன். 2016 இல் 'கேள்விகளால் ஒரு வேள்வி' என்ற நாடகத்தை போட்டிக்காக எழுதி நெறிப்படுத்தினேன். அது இரண்டாம் இடத்தினைப்பெற்றது. அவ்வாறே கத்தோலிக்க இளைஞர் ஆணைக்குழு நடத்திய நாடகப்போட்டிக்காக 'கூடு திரும்புகிறார்கள்' என்ற நவீன நாடகத்தினை தயாரித்தோம் நேர முரண்பாடு காரணமாக அது நடுவர்கள் உட்பட அதிகமாக பலரால் பாராட்டப்பட்டாலும் இரண்டாம் இடத்தைப்பெற்றது. இப்படி தொடர்ந்தும் நாடகத்துறையோடு ஈடுபட்டு வருகின்றேன்.

**கேள்வி : கணிசமான அளவில் கவிதைகளையும் படைத்துள்ளீர்கள் உங்கள் கவிதைப் படைப்புக்கள் பற்றிக் கூறமுடியுமா ?**

பதில் : கவிதைகளை எழுதுவதனை ஒருகாலத்தில் வழமையாகக் கொண்டிருந்தேன் அதிகமாக எண்பதுகள் காலப் பகுதியில்தான் பல கவிதைகளை எழுதினேன் 'ஈழம் என்னை அழைக்கின்றது' என்ற கவிதைத் தொகுதியே எனது முதல் கவிதைத் தொகுதி. அது எமது விடுதலைப் போராட்டம் தொடர்பானது. 'நெருப்பையும் சுடும் நெஞ்சின் நினைவு-கள்' என்ற கவிதைத் தொகுதியை நான் இந்தியாவிலே நின்ற போது வெளியீடு செய்தேன், அதுவும் ஈழத்தமிழரின் துன்பங்களைப் பேசுவது. அதேபோல 1985 ஆம் ஆண்டு 'நெஞ்சை மிதித்த அந்த நினைவுகள்' என்ற பெண்ணியம் தொடர்பான கவிதைகளைக் கொண்ட தொகுதி அதனையும் இந்தியாவிலேயே வெளியீடு செய்தேன். பின்னர் நீண்ட நாட்களுக்குப் பின் 2001 இல்'வேலி' என்ற கவிதைத் தொகுதியை எழுதினேன். அது சாதிய ஒடுக்கமுறைக்கு எதிரான கவிதைகள் அந்நூலுக்கு வடக்குமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் சிறந்த கவிதை நூலுக்கான சாகித்திய விருதும் கிடைத்தது. இவற்றினை விட அவ்வப்போது கலைமுகம் போன்ற இதழ்களுக்கு பல கவிதைகளை எழுதி உள்ளேன்.

**கேள்வி : நீங்கள் எழுதிய சிறுகதை முயற்சிகள் பற்றி...?**

பதில் : அவ்வப்போது சிறுகதைகளை எழுதுவதும் எனது ஒரு வழக்கமாக இருந்தது. பாதுகாவலன், புதிய உலகம் போன்றவைக்கு அதிக சிறுகதைகளை எழுதினேன். 'அமுது' கலைஇலக்கிய இதழ் நடத்திய போட்டியிலும் எனது சிறுகதை ஒன்று முதல் பரிசைப் பெற்றது 24 சிறுகதைகள் வரை தொகுத்து நூலாக வெளியிட எண்ணியுள்ளேன். அதனைவிட 1978 இல் செவ்வந்தி என்ற இதழை ஜெயபாலன் என்பவர் நடத்தினார். அந்தச் 'செவ்வந்தி' இதழினால் ஒரு குறுநாவலுக்கான போட்டி நடத்தப்பட்டது. அதற்கென நான் 'அழுகைக்குரல்கள்' என்ற குறுநாவலை எழுதினேன் அது இரண்டாவது பரிசினைப்பெற்றது. அது உண்மைச் சம்பவங்கைளை அடிப்படையாகக் கொண்ட நாவல். திருவையாறில் அருட்தந்தை ஜெயசீலன் அடிகளுடன் ஒரு கூட்டுப் பண்ணைச் செயற்பாட்டில் சிலகாலம் ஈடுபட்டேன். அப்போது தான் மலையக மக்கள் வன்னிப்பகுதியில் எதிர்நோக்கிய சிக்கல்களை நேரில் காணும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர்களுடைய அவலங்களை வெளிப்படுத்திய நாவல் அது. அதனை எனது நண்பர் பால நடராஜன் அவர்கள் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களிடம் காட்டியபோது அவர் பாராட்டி சிறந்த சமூக நாவலான இதனை வெளியிட வேண்டுமென்று கூறினார். ஆனால் துரதிஸ்டவசமாக அந்த நாவல் இடப்பெயர்வுகளோடு அழிந்து விட்டது. எனது புனைகதைகள் எல்லாமே பெரும்பாலும் உண்மைக் கதைகளை அடிப்படையாகக் கொண்டவை அதிலும் குறிப்பாக ஒடுக்கப்படும் மக்கள் பற்றியது. எனது எல்லாப் படைப்புக்களிலும் ஒடுக்கப்படும் மக்கள் தொடர்பான பரிவும் அவர்களின் குரலின் நியாயப்பாடும் இருக்கும்

**கேள்வி :திருவிவிலிய நாடகங்கள் பலவற்றை எழுதியுள்ளீர்களே அதன் அனுபவம் பற்றிப் பகிர்ந்துகொள்வீர்களா..?**

பதில் : அருட்திரு நீ. மரியசேவியர் அடிகள் திருமறைக் கலாமன்றம் மூலமாக தொண்ணூறுகளில் திருவிவிலியம் முழுவதையும் நாடகங்களாக எழுதி வெளியிடுகின்ற ஒரு செயற்திட்டத்தினை முன்னெடுத்தார். தொடக்கத்தில் திரு அழகராஜா அவர்கள் ஓரிரு நாடகங்களை எழுதினார். பின்னர் நான் நாடகம் ஒன்றினை எழுதியபோது மரியசேவியர் அடிகள் அதைப்பார்த்து ஊக்குவித்தது மட்டுமன்றி தொடர்ந்து என்னையே எழுதுமாறு பணித்தார். அதற்காக நான் இன்பராஜன் என்ற புனைபெயரில் 40 நாடகங்களை எழுதியுள்ளளேன். அதில் 28 நாடகங்கள் நூலாக வெளிவந்தன. பின்னர் அதனை வெளியிடுவதற்கு நிதி இல்லாது போனதால் நிறுத்தப்பட்டுவிட்டது. விவிலியம் தொடர்பான ஆழமான அறிவு எனக்கு இருக்கவில்லை. நான்கிறிஸ்தவ பாடத்தினைக் கற்றது அருட்பணி ஜெயசீலன் அடிகளிடமே. விலிய கருத்துக்கள் தொடர்பாக நான் அதிக அளவில் முரண்படுவேன். ஆனால் ஜெயசீலன் அடிகள்தான் என்னை ஆற்றுப்படுத்துவார். அவரது கருத்தியல்கள் தான் என்னை மாற்றுப்பார்வைகளுக்குத் தூண்டின என்று கூறலாம். அவர் தந்த அடிப்படைப் போதனை எனது மனதில் நின்றாலும் நான் இதற்காக அதிகமாக வாசித்தும் தேடியும் தான் எழுதத் தொடங்கினேன் அதனை ஓய்வுநிலை ஆசிரியர் யோண்பிள்ளை அவர்களை பார்த்த பின்பே நூலாக பிரசுரித்தனர். நான் விவிலியத்தினை ஆழமாகக் கற்பதற்கு அச்செயற்பாடு ஒரு காரணமாக அமைந்தது. அதனை பலரும் பாராட்டினார்கள். ஆனால் அந்நாடகங்களில் எனது கற்பனையை அதிகம் பயன்படுத்த முடியவில்லை விவிலிய வரலாற்று எல்லையில் நின்றுதான் அதனைப் படைத்தேன்.

**கேள்வி : இதழியல்துறையில் உங்களது ஆர்வம் எவ்வாறு இருந்தது.?**

பதில் : மரியசேவியர் அடிகள் உரும்பிராயில் இருந்தபோது 'சிலுவை' என்ற இதழை ஆரம்பித்து நடத்தினார் அதற்கு நானும் உதவினேன். தொடர்ந்து எழுத்துத்துறையின் ஆர்வம் காரணமாக இதழியில் செயற்பாடுகிளிலும் ஈடுபடும் சந்தர்ப்பங்கள் சில ஏற்பட்டன 1976 ஆம் ஆண்டில் அருட்திரு ஜெயசீலன் அடிகளாருடன் இருந்தபோது 'மனிதன்' என்ற ஒர் இதழை அவர் வெளியிட்டார். அதன் மூன்று இதழ்களுக்கு நான் பொறுப்பாசிரியராக இருந்தேன்.தொடர்ந்து பல்கலைக் கழக மாணவர்களிடம் அப்பணி வழங்கப் பட்டாலும் நானும் நண்பர் பால நடராஜனும் அதற்கு துணையாக இருந்து செயற்பட்டோம். 1992 காலப்பகுதியில் கொழும்பில் இருந்தபோது திருமறைக் கலாமன்றத்தின் 'கலைமுகம்' இதழின் பொறுப்பாசிரியராக இரண்டுவருடங்கள் பணியாற்றினேன்.

**கேள்வி : தற்போதைய தங்களது எழுத்து முயற்சிகள் பற்றி..?**

பதில் : தற்போது எனக்கு எழுதுவதில் ஒரு சலிப்பு. ஏனென்றால் உலகம் முழுவதும் இதுவரை எத்தனையோ ஆயிரம் போர் எழுதாததையும் சொல்லாததையுமா நாம் புதிதாக எழுதிவிடப்போகின்றோம். நாம் எழுதுவதை எத்தனை பேர் படிக்கின்றார்கள். அத்னால் என்ன சமூகமாற்றம் வந்து-விடப்போகின்றது என்ற கேள்விகள் எனக்கு எழுதும் உந்துதலைத் தரவில்லை. ஆனால் நான் திரு விவிலியத்தினை ஆழமா-கப் படித்துவருகின்றேன் அதனை வெறும் சமய நூலாக மட்டுமே பலரும் நோக்குகின்றார்கள் ஆனால் அதனை ஆழமாக கற்றால், அதன்படி வாழ்ந்தால் உலகில் எந்தப் பிரச்சனையும் எழாது. திருவிலியத்தின் சில கருத்துக்களில் எனக்கு முரண்பாடுகள் இருந்தாலும் அது ஒரு உலகப் பொது நெறி. அதனை ஆழமாக கற்று வெளிக்கொணர வேண்டுமென்பது எனது இப்போதைய தேடலும் அவாவும் ஆகும்.

# காவலன் கலசம்

## செபமே நம் வாழ்வின் ஜெயம்



அருட்பணி. எம். நிர்மலராஜ் (செ.தா.)

**முன்னுரை**

மனித வாழ்வின் மாண்பிற்கும் மனித உறவின் வளர்ச்சிக்கும் ஆதாரமும் அடிப்படையுமாக அமைவது செபம். நமது ஆன்மீக வாழ்வின் சக்தியை அதிகரிக்கச் செய்யும் ஊடகம் செபம்.

**செபம் என்றால் என்ன?**

என்று சற்று ஆழமாகச் சிந்திக்கும் போது செபம் என்பது மூன்றெழுத்து மூச்சு. கடலடி முத்து. ஆழ்கடல் அமைதி. பேச்சில் தொடங்கி பேரமைதிக்குள் உறையும் உன்மை. தன்னைத் தேடி முடிவில் தன்னை மறந்து பிறரை அடையும் போராற்றல் கொண்ட உயிர். உள்ளுணர்வு விதையைப் பிறர் சேவை மரமாக மாற்றிடும் நிலம். ஏழை எளியவர்களின் வாய்மை. இவ்வாறு மூன்றெழுத்தில் அடங்கியும், அடங்காமல் அமையும் சொல் தான் செபம்.

கிட்டச் சென்றாலும் எட்டிப் போகும் தொடுவானம் தான் செபம். கண்டவர் விண்டிலர் விண்டிலர் கண்டிலர் எனும் மறைபொருளாம் கடவுளை வருடிப் பார்க்க எண்ணுவது செபம். மனிதத் தன்மைக்குள் இறைத்தன்மையை ஊற்றெடுக்கச் செய்ய உதவுவது தான் செபம். எங்கும் உறையும் இறையைத் தன்னுள் உயிர்கொள்ள வைக்கவும். தன்னுள் உறைந்த இறையை மண்ணிலும் மக்களிலும் கண்டுணரச் செய்வதும் செபம். செபம் தான் நம் வாழ்வின் அடித்தளமாக இருந்து மனிதர்களாக இவ்வுலகில் வளர உதவுகின்றது. பொதுவாகச் செபம் என்பது இறைவனுடன் நாம் கொள்ளும் உண்மையான உரையாடல்.

**எப்படிச் செபிப்பது?**

இன்று பலரின் உள்ளங்களில் நடக்கும் மாபெரும் போராட்டம் எப்படி செபிப்பது? எதற்காகச் செபிப்பது? எனது செபம் நிச்சயம் கேட்கப்படுமா என்ற குழம்பிய மனநிலை அதிகரித்து விட்டது. ஆனாலும் நாம் மனந்தளராமல் செபிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி பரிசுத்த விவிலியத்தில் "நேர்மையற்ற நடுவரும் கைம்பெண்ணும்" என்ற உவமையில் ஆழமாகக் கூறியுள்ளார். (லூக். 18:1-8.)

ஓர் ஊரில் அண்ணனும் தம்பியும் தங்களுடைய வயல்களின் நடுவில் இருந்த தென்னை மரத்தின் மீது உரிமை கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். நீதிபதி வழக்கைத் தள்ளிப் போட்டுக் கொண்டே சென்றார். வழக்கு முடியும் முன் தென்னை மரம் பட்டுப் போய்விட்டது. நீதிமன்றத்தில் தொடரும் வழக்கைப் போலவே இயேசுக் கிறிஸ்து கூறியுள்ள உவமையிலும் நீதிகேட்டு நடுவரிடம் சென்ற கைம்பெண்ணை நடுவர் இழுத்தடித்தார். ஆனால் அந்தக் கைம்பெண்ணின் நச்சரிப்பைத் தாங்க முடியாமல் இறுதியில் அவளுக்கு நீதி வழங்கினார். இவ்வுவமை மூலமாக கிறிஸ்து நமக்கு தரும் செய்தி. நேர்மையற்ற நடுவரே கைம்பெண்ணின் தொல்லை தாங்காமல் நீதி வழங்கினார் என்றால், நீதியுள்ள கடவுள் தம்மிடம் இடைவிடாமல் கேட்கும் விண்ணப்பங்களை நிச்சயம் தருவார் என்றும் மனந்தளராமல் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்ற மனப்பான்மையை வளர்க்க வேண்டும். "சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்" என்பர். எமது ஆன்றோர். ஒருவர் அடிக்கடி ஒரு காரியத்தைச் செய்யும் போது அதில் அவர் தேர்ச்சி பெறுவது இயல்பு. அதுபோன்று நாம் அடிக்கடி செபிப்பதால் செபத்தில் தேர்ச்சி பெறுகின்றோம். செபத்தில் பெறும் இறை-அமைதி நம்மை செபத்தில் அதிகம் ஈடுபாடு கொள்ளச் செய்கின்றது. இங்கு செபத்தில் நாம் எவ்வளவு நேரம் செலவழிக்கின்றோம் என்பதை விட, எவ்வளவு ஆர்வமாக விழிப்புணர்வுடன் இறைவனின் குரலுக்கு செவிமடுக்கின்றோம் என்பதே முக்கியமாகும்.

**மனிதமுயற்சி:**

செபம் செய்வதற்குக் கடவுள் நம்பிக்கையும், மனித முயற்சியும் இணைந்து செயற்பட வேண்டும். செபத்தினால் எல்லாம் கைகூடும் என்று எண்ணி மனித முயற்சியைக் கைவிடலாகாது. மோசே மலைமீது தம் கைகளை உயர்த்திச் செபித்தார். அதேநேரத்தில் யோசுவா தரையில் வாளை உயர்த்தி எதிரிகளை வெட்டி வீழ்த்தினார். கடவுளே எல்லாம் பார்த்துக் கொள்வார் என்று சும்மா இருப்பது கடவுள் நம்பிக்கை ஆகாது. மாறாக அது கடவுளைச் சோதிப்பதாகும் கடவுளே கைவிட்டாலும் மனித முயற்சி பலன் தரும் என்கிறார் வள்ளுவர். "தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும்". (குறள் 619) அதேநேரத்தில் பின்வரும் உண்மையையும் நாம் மறக்கக் கூடாது. "கடவுள் கொடுப்பதை மனிதர் தடுக்கமுடியாது. கடவுள் தடுப்பதை மனிதர் கொடுக்க முடியாது." மார்க்கோனி கடவுள் நம்பிக்கையில் லாதவராக வாழ்ந்த சூழ்நிலையில். செபிப்பவர்களைக் கேலி செய்வாராம். "எங்கேயோ இருக்கிற கடவுள் நீங்கள் முணுமுணுக்கிற செபங்களை எவ்வாறு கேட்க முடியும்? என்று சொல்வாராம். சிறிது காலம் கழித்து வானொலிப் பெட்டியை அவர் கண்டு பிடித்தார். பல மைல் தூரத்திற்கு அப்பால் அவர் பேசிய பேச்சை மக்கள் கேட்டனர். அப்போது தான் அவருக்கு ஓர் உண்மை உதயமாயிற்று. சாதாரண மனிதனாகிய நான் உருவாக்கிய இந்த வானொலிப் பெட்டி வழியாக பல மைல்களுக்கு அப்பால் உள்ளவர்களோடு உறவாட முடிகின்றதென்றால் கடவுளும் மக்களுடைய செபத்தைக் கேட்கிறார் என்பதில் என்ன சந்தேகம் இருக்க முடியும்?

நமது செபம் கேட்கப்படுமா? அல்லது இல்லையா என்ற சந்தேகத்துடன் செபிப்பவர்களுக்கு மார்க்கோனியின் நிகழ்வு ஒரு பதிலாக அமைகிறது. செபத்தில் கடமைக்காகவும், கடனுக்காகவும், பங்கெடுக்காமல் உணர்வுபூர்வமாக ஈடுபாட்டோடு பங்கெடுக்க அழைக்கப்பட்டுள்ளோம். எனவே தான் செபத்தில் ஈடுபாடும், ஆர்வமும் கொண்ட மன நிலையில் வேண்டுவது கிடைக்கும் என்ற நிச்சயத்தன்மையோடு செபத்தை அணுகக் கற்றுக்கொள்ள வேண்டும். விவிலியத்திலும் இந்த நிச்சயத்தன்மை சுட்டிக்காட்டப்படுகின்றது. எரே 33:3 "என்னிடம் மன்றாடு. உனக்கு நான் செவிசாய்ப்பேன்" உரோ 10:12 "அவரை நோக்கி மன்றாடும் யாவருக்கும் அவர் அளவற்ற நலன்களைப் பொழிகிறார்."

அமைதியில் ஆண்டவரில் இணைந்திரு கிரேக்க நாட்டுத் தத்துவமேதை சாக்ரட்டிஸ் என்பவர் இளைஞர்களுக்குப் பேச்சுக் கலையை கற்றுக் கொடுக்க ஆளுக்கு 100 ரூபாய் கட்டணம் பெற்றார். ஆனால் ஒரு இளைஞனிடம் மட்டும் 200 ரூபாய் கட்டணம் பெற்றார். ஏன் என்று அவரைக் கேட்டதற்கு அவர் கூறியது: "மற்ற இளைஞர்களுக்குப் பேசுவது எப்படி என்று கற்றுக் கொடுத்தேன். ஆனால் இந்த இளைஞனுக்கோ பேசாமல் இருப்பது எப்படி என்று கற்றுக்கொடுத்தேன்." பேச்சுக் கலையை விட மௌனக்கலை கடினமானது என்ற உண்மையை அவர் உணரவைத்தார். (தொடர் 11ம் பக்)

---

# 200 ஆம் ஆண்டை நோக்கிப் பயணிக்கும் போர்டோவின் திருக்குடும்ப சபைச் சகோதரிகள்

**ஈழத்தில் சங்கமித்த ஐரோப்பிய முத்துக்கள்**

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

**அருட்சகோதரி தியோப்பான் தாயார் (அமெல்டா)**

அமெல்டா Poitiers சென்று, நம்பிக்கைக்கிளையில் 1894 வைகாசி 23 தொடக்கம் ஆவணி 3 வரையும் பொஸ்ரியூலன்ற் ஆக உருவாக்கம் பெற்றார்.

இவரின் குடும்பத்தில் 4 ஆண்கள் மக்கிம் 15 வயது தந்தையுடன் வேலை செய்தார். பசில் 13 வயது யூனியறேற்றில் சேர்க்கப்பட்டார். வலண்ரைன், அல்விறெட் பாடசாலை சென்று வந்தனர். பெற்றோர் நடுத்தரமானவர்கள். அமெல்டாவின் தாயின் தகப்பன் 2 வருடங்களுக்கு முன் இறந்த போது, 2 பண்ணைகளைத் தம் 2 மகள் மாருக்கும் கொடுத்தார். ஒருவர் மற்றவரிலும், உயர்ந்தவர். அமெல்டாவின் தாய் தன் சகோதரிக்கு 5 வருடங்களுக்குப் பணம் கொடுக்கவேண்டும். பொருளாதார நெருக்கடிகளும் குடும்பத்தில் ஏற்பட்டன.

ஆயினும் அமெல்டா 1894 ஆவணி 7ல் கொன்செப்ஷன் நொவிசியற்றில் தன்னை ஆயத்தம் செய்தார். நல்ல பக்தி உறுதியான உள்ளம் தாராள மனம், கஸ்டமானதையும் செய்து முடிக்கும் தன்மை, திருக்குடும்ப வாஞ்சை, வீட்டு வேலையில் ஆர்வம், தையல், சக்கிறிஸ்ரி வேலை எல்லாவற்றையும் நல்ல அழகாகச் செய்வார். ஆனால் இரத்த சோகை (Anaemia) நோயுடன் போராட வேண்டி இருந்தது. நொவிசியற்றில் ஒரு துறவிக்கு தேவையான தியாகம் நிறைந்த அத்தனை பண்புகளும் இவரில் காணப்பட்டது. இறைவன் அருளால் 1855 ஆடி 9ல் உடுப்புப்பெற்று SR. மாறி தியோப்பான் என்னும் பெயர் பெற்றார். குழந்தைகள் மட்டில் அக்கறை உள்ளர் தலைவிகளுக்கு பணிந்த உள்ளம், காத்திரமான தன்மை, நம்பகம் வாய்ந்தவர் என்பதைக் காட்டியது. 1896 ஆவணி 25ல் Reims இல் முதல் வாக்குத்தத்தமும் 1899 புரட்டாதி 3ல் பிரான்ஸ் நொவிசியற்றில் நித்தியமும் செய்தார். நித்திய வாக்குத்தத்தம் செய்தபின் தனது Grand mothes I விட்டுப் பிரியும் போது, ஆசிய மிஷனறியாகத் தன்னை கையளித்தார். பின்னர் தன் குடும்பத்தைக் காண Assairs சென்றபோது, தனது பங்குக்குரு M. Venard பங்கு மக்கள் யாவரும் மனமகிழ்வுடன் பிரியாவிடை கூறினர்.

சிஸ். மாறிய தியோப்பான் போர்டோ வந்து சில நாட்கள் செலவிட்டு, 1899 புரட்டாதியில் மார்செயி துறைமுகம் வந்து அங்கிருந்து கொழும்பை வந்தடைந்தனர். தென்பகுதியில் தலைவியாக இருந்த மார்ஷல் தாயார் 1907 சித்திரையில் அவரை சிலாபத்திற்கு அண்மையில் திறந்த ஆங்கில பாடசாலை ஒன்றில் சேர்த்தார். அங்கு இருந்த நவசந்நியாசப் பயிற்சிக்கு கொஞ்சக்காலம் தலைமை வகித்தார். பின்பு யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டார். இங்கு சக்கிறிஸ்ரி வேலையைப் பொறுப்பெடுத்தார். பெரிய கோயில் சக்கிறிஸ்ரி வேலையும் இவரே செய்தார்.

1911 ஆனியில் பிறக்சீட்தாயார் யாழ்ப்பாணத்தை விட்டுவிலகிய போது, சிஸ். தியோப்பான் 2வது ஆலோசகராகவும், 1912 தை மாதம் வருட தியானத்தின் பின் முதல் ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டார். 1917 பங்குனியில் சிறிது கால ஓய்விற்காக கொழும்பிற்கு வந்து பின் நுவரெலியாவுக்கு சென்றார். பிறக்சீட் தாயார் இவவை உற்காகப்படுத்தி வைத்திருந்தார். 1916 சித்திரை 24 இல் குழுத்தலைவியாக முதல்முறையும், 1921ல் 2வது முறையாகப் புதுப்பித்தார். 1922 மாசியில் இறைவனின் சொந்தக் குமாரத்திகள் கிளையில் இறுதியாக சேர்க்கப்பட்டார்.

1924ல் ஐரோப்பா செல்லக் கிடைத்தது மிகவும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. பங்குனி 19ல் கொழும்பில் இருந்து புறப்பட்டு, சித்திரை 21 போர்டோவை அடைந்து, 24ல் தனது வயதான தாயைச் சந்தித்து, ஊர்து நகருக்கு யாத்திரை சென்றார். தனது வருடத் தியானத்தையும் செய்து, சபைத் தலைவியையும் சந்தித்து, புரட்டாசி 18ல் இரு இளம் சகோதரிகளுடன் இலங்கை வந்து சேர்ந்தார்.

இளவாலையில் தான் பொறுப்பேற்ற குழுத்தலைவி பணியை தொடர்வதற்குப் பதிலாக, அனுராதபுரத்தில் கிளமென்ர் தாயாருக்கு ஏற்பட்ட சுகவீனம் காரணமாக அதை ஈடுசெய்வதற்குச் சென்றார். இது சகோதரி தியோப்பானின் தாராள உள்ளத்தையும், எதற்கும் தயார் என்ற நிலையையும் காட்டுகிறது. 1924 கார்த்திகை 9ல் புதிய பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1927ல் புதுப்பிக்கப்பட்டு 1930 கார்த்திகை வரைபணி செய்தார்.

தியோபில் தாயாரின் உடல்நிலை இளவாலையில் பணிகளைத் தொடரமுடியாது இருப்பதைக் கண்டு, தியோப்பான் தாயார் திரும்பவும் அழைக்கப்பட்டார். தாராள மனதுடன் இப்பொறுப்பை ஏற்று 1932 தை 22ல் யாழ் மடத்தில் தியானம் செய்து குழுத்தலைவியாக நியமனம் பெற்றார். 3 வருடங்கள் இளவாலையில் முடிந்ததும் மீளவும் 1935 தை 13ல் அனுராதபுரப்பணியை பொறுப்பேற்றார். 1937 ஆவணி 25ல் பிறக்சீட் தாயார் இறந்தபடியால் றோமின் அனுமதியுடன், 1947 தை 13 வரையும் புதுப்பிக்கப்பட்டு பணிபுரிந்தார். தியோபான் தாயாரின் வயது 75 அதற்குரிய பெலவீனம் இருந்தாலும் 5 ஆவது முறையாக குழுத் தலைவியின் காலம் முடிவுற்றாலும், புதிய தலைவிக்கு, இயலுமான வேளையில் உதவிசெய்யும் நல்மனம் கொண்டிருந்தார். (தொடரும்...)

**அருட்சகோதரி அம்புறோஸின் மார்க்**

# வழிபாடு வாழ்வாகுமா!!




அருட்பணி ச.ஜே.சுரேந்திரராஜா அ.ம.தி
(sjsurenomi@gmail.com)

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

**2.இசை என்பது தொட்டுணர முடியாத அனுபவம்**

அதிலும், ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு மாத்திரமே. இறைவன் பிரசன்னமாய் இருக்கின்றார் அதேவேளை மறைவாகவும் இருக்கின்றார். அவரது பிரசன்னத்தை வழிபாட்டிலே தொட்டுப்பார்க்க முடியும்.

**3.இசை என்பது செயற்பாட்டின் அனுபவம்**

இசை கற்பனைத் திறன்களை வளர்க்கும். ஏனெனில் இசையால் கேட்க மாத்திரமே முடிகின்றது. எமக்கும் இறைவனுக்குமிடையிலான உறவை அழகிய கற்பனையிலே வளர்ப்பதற்கு இசை உதவுகின்றது. இறைவார்த்தையை வாசிக்கும் போதும், அதைப் பாடலாகப் பாடுகின்ற போதும் நாமும் அந்நிகழ்வைக் கற்பனை பண்ணிப்பார்க்கின்றோம்.மீட்புவரலாற்றை எமது வாழ்வோடு சிந்தித்துப் பார்க்கின்றோம்.

**4.இசை என்பது உறவுக்கான அழைப்பு**

இசை என்பது ஒழுங்கமைக்கப்பட்ட அலைவரிசையின் வெளிப்பாடு. இது பல உணர்வுகளைக் கடந்து உறவுப் பரிமாற்றத்திற்கு அழைக்கின்றது. ஒன்றித்து வாழ அழைக்கின்றது. கிறிஸ்தவவாழ்வுதனித்து வாழும் வாழ்வல்ல மாறாக பிறரோடு இணைந்து வாழும் வாழ்க்கையே. இதை இசை எமக்குக் கற்றுத்தருகின்றது.

**எமது வழிபாடு**

திரு இசைக்கு ஒரு தனி ரகம் உண்டு. சினிமா மெட்டுக்கள் எல்லாம் இவ்விசைக்குச் சாத்தியமாகாது. ஆனாலும் எம்மில் பலர் இந்த இசையைத் தான் விரும்புகின்றனர். அதனது தாளம், மெட்டு, ஏன் அதனது வேகம் கூட எமது வழிபாட்டிற்குள்தாக்கத்தைச்செலுத்துகின்றன. திருவிழா அல்லது பெருவிழாக் காலங்களில் புதிய பாடல்களைத் தெரிவுசெய்வதும் வழிபாட்டிற்கு அழகைச் சேர்ப்பதாக கருதுகின்றனர்.

யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தின் குருமுதல்வராக இருந்த அருட்தந்தை மைக்கல்சாமி அமதி, 'கிறிஸ்து கீதம்' எனும் நூல் ஒன்றிற்கு ஆசியுரை வழங்கியிருந்தார் 'பாடும் போதே தனித்தனி மனிதனை ஒரு குடும்பமாக இணைக் கும் சக்தியும், மக்களின் மனதையும் உள்ளத்தையும் தொட்டு ஆண்டவரிலேயே தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்தச் செய்யும் ஆற்றலும் இசைக்கு உண்டு. பாடலிலுள்ள பாவும், பண்ணும் நடையை அமைதியானதாகவோ, ஆனந்தமானதாகவோ, விறுவிறுப்பானதாகவோ மாற்றவும், வைத்திருக்கவும் முடியும். மனிதனையும் எளிதாக ஆராதனைக்கு இட்டுச்செல்லும் ஆற்றல் இசைக்கு இருப்பதனால் செபக் கூடங்களில் (ஆலயங்களில்) ஆண்டவரைப் புகழ்ந்து ஆராதிக்க சிறந்த வழியாகப் பாடல் அமைகிறது. தனக்குப் பிடித்திருக்கின்றது என்பதற்காக ஒரு பாடலை எவரும் பாடக்கூடாது. ஆவியால் ஏவப்படும் பொழுது மட்டுமே செபக்குழுவின் வளர்ச்சிக்காக பாடல்கள் எல்லாம் இசைக்கப்படல் வேண்டும். பாடல்கள் எல்லாம் செபமாக வேண்டும், உள்ளத்திலிருந்து எழ வேண்டும். ஒரு பாடலின் செய்தியே முக்கியம். இராகமும் தாளமுமல்ல. ஆழமான விசுவாசத்தோடும் செப உணர்வோடும் பாடப் படும் பாடல் ஆற்றல் மிக்க விளைவுகளை ஏற்படுத்தும்...' ('கிறிஸ்து கீதம்', 1-9-1978). இவரது இந்த ஞானம் நிறைந்த வார்த்தைகள் இன்றிலிருந்தே திருஇசை எவ்வாறு அமையவேண்டும் என்றும், அல்லது மக்களின் பங்களிப்பு எவ்வாறு இருக்க வேண்டும்என்றும்குறித்துக்காட்டுகின்றன.


ஞாயிறு வழிபாடு தான் அனைத்து வழிபாட்டிலும் அதி உச்ச நிலையை அடையவேண்டும். இதனால் இசை வாத்தியங்களை வாசிப்போர் மிகக் கவனமான முறையிலே தங்களைத் தயார் படுத்தித் தமது ஆற்றலைத் திருவழிபாட்டிற்குள் வெளிக்காட்டமுடியும். இசைக்கருவிகளை வாசிப்போர் மத்தியில் போட்டியோ, வேறுபாடோ இருக்கவே கூடாது. அப்படி இருப்பின் அது வழிபாட்டில் பங்குபெறுவதற்கும் அதிலே இறைவனைத் தேடுவதற்கும் அர்த்தமில்லாமல் போய்விடும். இன்று பல பங்குகளில் உள்ள ஆலயங்களிலே பாடகர்குழாமே பிரச்சினைக்குரிய தாய் மாறுகின்றது. ஆற்றல்களை வெளிப்படுத்த திருஅவை ஒரு சந்தர்ப்பம் அளிக்கும் போது அங்கே தான் போட்டிகளும் பொறாமைகளும் பிறக்கின்றன.

(தொடரும்....)

# இலக்குவைத்து இயங்கிடுவோம்!

இலக்கு வைத்து இயங்குதல் மனித வாழ்விற்கு இன்றியமையாததாக அமைகின்றது. சிந்தனைகளைக் குவியப்படுத்தி, இலக்கு சார்பாக இயங்குதல் சக்திசார் செயற்பாட்டினை இதைபடுத்துகின்றது. எமது இல்லத்தில் வெளிச்சம் எரிய, நல்ல இலக்குகளை முன்வைத்து இயங்கிடுவோம். நல்லபடி வாழ வல்லவராய் வாழ்ந்திடுவோம்.

ஓர் இலக்கிற்கு ஒரு பக்கம் என்ற கணக்கில் ஒவ்வொரு இலக்கையும் தனித்தனியாக ஒரு தாளில் குறித்து வைப்போம். ஓர் இலக்கையும் அதன் செயற்திறனையும் ஒரு பக்கத்தில் 250 வார்த்தைகளுக்கு மேற்படாமல் குறிப்பிடுவோம். 20 வீத விடயங்களில் மட்டும் கவனம் செலுத்தி, மூன்று அல்லது ஆறு இலக்குகளைத்




தேர்ந்தெடுப்போம். இலக்குகளைத் தேர்ந்தெடுத்த பின்னர் அவை ஒழுங்காக நடைமுறைக்கு உள்ளாக்கப்படுகின்றனவா என்பதை நாள்தோறும் மதிப்பீடு செய்வோம். செயற்திறன்மிக்க நிலையில் அவை எமது வாழ்வில் அரங்கேறுகின்றனவா என நுணுக்கமாக அவதானிப்போம்.

டாக்டர் கென்னத் பிளான்சார்ட் என்பவரும் ஸ்பனர் ஜான்சன் என்பவரும் இணைந்து எழுதிய 'ஒரு நிமிட மேலாளர்' நூலில் இருந்து:

"நான் எதிர்பார்க்கும் விடயங்களை ஒரு நிமிட மேலாளர் உங்களுக்கு எவ்வாறு எடுத்துக் காட்டுகின்றார்?" என்று அந்த இளைஞர் கேட்டார்." ஓர் எடுத்துக் காட்டின் மூலம் அதை நான் விளக்குகிறேன்" என்று ட்ரென்னெல் கூறினார்.

"என்னுடைய ஒரு நிமிட இலக்குகளில் ஒன்று இவ்வாறு அமைந்திருந்தது. செயற்திறன் தொடர்பான பிரச்சினைகளைக் கண்டுணர்ந்து, அவற்றிற்கான தீர்வுகளைக் கண்டுபிடிக்கவேண்டும். அத்தீர்வுகள் நடைமுறையில் செயற்படுத்தப்படும்பொழுது ஏற்கெனவே இருந்த சூழ்நிலையை அவை முற்றிலுமாக மாற்றி அமைக்க வேண்டும்.

நான் இங்கு வேலைக்கு வந்தபோது தீர்க்கப்படவேண்டிய ஒரு பிரச்சினையை நான் கண்டுணர்ந்தேன். ஆனால் அதை எப்படித் தீர்ப்பது என்பது எனக்குத் தெரிந்திருக்கவில்லை. எனவே, ஒருநிமிட மேலாளரைத் தொலைபேசியில் அழைத்தேன். அவர் எனக்குப் பதிலளித்தபோது, 'நான் ஒரு பிரச்சினையைக் கண்டு பிடித்துள்ளேன்' என்று அவரிடம் கூறினேன். உடனே அவர், 'நல்லது. அதைத் தீர்ப்பதற்காகவே உங்களை வேலைக்கு அமர்த்தியுள்ளோம்' என்று கூறினார்.

அமைதி தொடர்ந்தது. நான் பேசினேன்: 'இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்று எனக்குத் தெரியவில்லை.' அதற்கு அவர், 'ட்ரென்னெல், வேலையில் நீங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றிற்குத் தீர்வு காண்பது உங்களுடைய எதிர்கால இலக்குகளில் ஒன்று. ஆனால் நீங்கள் புதிதாக வேலைக்குச் சேர்ந்திருப்பதால் என் அலுவலகத்திற்கு வாருங்கள். நாம் இருவரும் பேசலாம்' என்று கூறினார். நான் அவரது அறைக்குள் நுழைந்தபோது,'ட்ரென்னெல், உங்கள் பிரச்சினை என்னவென்று நடத்தைசார் வார்த்தைகளில் என்னிடம் கூறுங்கள்' என்று கூறினார். 'நடத்தைசார் வார்த்தைகளா? அப்படியென்றால் என்ன?' என்று நான் கேட்டேன்.

'வெறுமனே மனப்போக்குகள் அல்லது உணர்வுகளை மட்டுமே செவிமடுக்க நான் விரும்பவில்லை. என்ன நிகழ்ந்துகொண்டிருக்கிறது என்பதை கண்காணிக்கத்தக்க, அளவிடத்தக்க வார்த்தைகளில் கூறுங்கள்' என்று அவர் விளக்கினார். என்னால் முடிந்த அளவிற்குப் பிரச்சினையைத் தெளிவாக விபரித்தேன்.

'ட்ரென்னெல், பிரச்சனை எனக்குப் புரிகின்றது. என்ன நிகழவேண்டும் என்று நீங்கள் விரும்பு கின்றீர்கள் என்பதை நடத்தைசார் வார்த்தைகளில் எனக்குக் கூறுங்கள்' என்று கூறினார்.

'எனக்குத் தெரியவில்லை' எனப் பதிலளித்தேன்.

'அப்படியென்றால் எனது நேரத்தை வீணடிக்காதீர்கள்' என்று வெடுக்கென்று கூறினார்.

வியப்பில் ஒரு கணம் வியந்து உறைந்துபோய் நின்றுவிட்டேன். நல்ல காலமாக அவர் அந்த மயான அமைதியைக் கலைத்தார்.

'என்ன நிகழவேண்டும் என்று நீங்கள் விரும்புகின்றீர்கள் என்பதை உங்களால் என்னிடம் கூற முடியாவிட்டால், இப்போதைக்கு உங்களிடம் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று அர்த்தம். உண்மையிலே என்ன நிகழ்ந்துகொண்டிருக்கிறது என்பதற்கும் என்ன நிகழ வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள் என்பதற்கும் இடையே வேறுபாடுகள் இருந்தால் மட்டுமே அங்கு பிரச்சனை இருக்கிறது என்று அர்த்தம்' என்று அவர் கூறினார்.

நான் பொதுவாக எந்தவொரு விடயத்தையும் உடனடியாக உட்கிரகித்துக் கொள்ளும் திறன் பெற்றவன் என்பதால், என்ன நிகழவேண்டும் என நான் விரும்புவதை விரைவிலேயே கண்டுகொண்டேன். அப்பொழுது அந்த ஒரு நிமிட மேலாளர், 'சரி, இப்பொழுது அது குறித்து என்ன செய்யப்போகின்றீர்கள்?' என்று கேட்டார். 'என்னால் முதல் திட்டத்தைச் செயற்படுத்த முடியும்' என்று கூறினேன். 'நீங்கள் முதல் திட்டத்தைச் செய்ய விரும்பினால், நீங்கள் செய்ய விரும்பியது உண்மையிலே நிகழுமா?' என்று கேட்டார். 'நிகழாது' என்று நான் பதில் உரைத்தேன். 'அப்படியானால் உங்கள் தீர்வு மோசமானது. உங்களால் வேறு என்ன செய்ய இயலும்?' என்று ஒரு நிமிட மேலாளர் கேட்டார்.'என்னால் இரண்டாவது திட்டத்தைச் செயற்படுத்த முடியும்' என்றேன்.

'நீங்கள் இரண்டாவது திட்டத்தைச் செய்ய விரும்பினால், நீங்கள் செய்ய விரும்பியது உண்மையிலே நிகழுமா?' என்று கேட்டார்.

'நிகழாது' என்றேன். 'அப்படியானால் உங்களது இந்தத் தீர்வும் மோசமானது தான். உங்களால் வேறு என்ன செய்ய இயலும்?' என்று அவர் மீண்டும் கேட்டார்.

நான் ஒரு நிமிடம் யோசித்துவிட்டு, 'என்னால் மூன்றாவது திட்டத்தைச் செயற்படுத்த முடியும். நான்

அருட்பணி. வின்சன் பற்றிக்

அதைச் செய்தால் நான் விரும்பும் விடயம் நிகழாது. எனவே, அதுவும் ஒரு மோசமான தீர்வு. சரிதானே' என்றேன்.

தன் முகத்தில் ஒரு புன்னகையுடன், 'இப்பொழுது நீங்கள் சரியான பாதையில் வரத் துவங்கியிருக்கின்றீர்கள்' என்றார் அவர்.


'நான் இத் தீர்வுகளில் சிலவற்றை ஒருங்கிணைத்துப் பார்க்கலாம் என்று நினைக்கின்றேன்' என்று கூறினேன்.

'எனக்கு அது நல்ல யோசனையாகத் தான் தோன்றுகின்றது' என்றார் அவர். 'இந்த வாரம் முதலாவது திட்டத்தையும் அடுத்த வாரம் இரண்டாவது திட்டத்தையும் அதற்கடுத்த வாரம் மூன்றாவது திட்டத்தையும் அமுல்படுத்தினால் எனது பிரச்சினை தீர்ந்துவிடும். மிக்க நன்றி. நீங்கள் எனது பிரச்சினையைத் தீர்த்து விட்டீர்கள்' என்று பெரும் மகிழ்வோடு பதில் சொன்னேன். அவருக்கு எரிச்சல் வந்தது. அவர் என்னை இடைமறித்து, 'நீங்களே உங்களது பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருக்கின்றீர்கள். நீங்கள் உங்களிடமே கேட்கக்கூடிய கேள்விகளை நான் உங்களிடம் கேட்டேன். அவ்வளவுதான். இப்போது இங்கிருந்து சென்று, உங்களுடைய பிரச்சினைகளை உங்களுடைய நேரத்தை உபயோகித்துத் தீர்த்துக் கொள்ளுங்கள்' என்றார் ஒரு நிமிட மேலாளர்.

அவர் என்ன செய்திருந்தார் என்பது எனக்குப் புரிந்தது. எதிர்காலத்தில் எனது பிரச்சினைகளை நானாகவே தீர்த்துக் கொள்ளும் வகையில் பிரச்சினைகளை எப்படித் தீர்க்கவேண்டும் என்பதை அவர் எனக்குக் காட்டியிருந்தார்.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

# காவலன் கலசம்




# என் கேள்விக்கென்ன பதில்!

## அருட்பணி செ. அன்புராசா

*(சுகந்தி, யாழ்ப்பாணம்)*

**கேள்வி: கொரோனா ஒருபக்கம், புயல்கள் மறுபக்கம் என அடுத் தடுத்துப் பல விபரீதங்கள்! இன்னும் என்னென்னவோ எல்லாம் காத்து நிற்கின்றனவோ தெரியவில்லை! ஏன் இந்நிலை?**

**ப:** ஸ்ரனி, இயற்கையின் முன்னால் நாம் ஏது என்பதை அது எடுத்தியம்புகின்றது! அப்படியென்றால், இயற்கையைப்படைத்த இறைவன் முன்னால் நாம் யார் என்றும் நம்மைச் சிந்திக்கத் தூண்டுகின்றது. விவிலியத்தில் திருப்பாடல் ஆசிரியரிடம் கேட்டால் நாம் யாரென்று சொல்வார். நிற்க, இயற்கையை மதியாவிட்டால் அது நம்மை மதிக்கும் என்ற செய்தியும் இவற்றுக்குள் அடங்கி இருக்கின்றன.

*(மல்லிகா, முல்லைத்தீவு)*

**கே: இந்தியத் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த கமலா கரிஸ் அமரிக்காவின் உப ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப் பட்டிருக்கின்றார். ஈழத் தமிழர்களுக்கு ஏதும் விமோசனம் கிடைக்குமா?**

**ப:** மல்லிகா, அமரிக்காவின் ஜனாதிபதியாகக் கமலா வந்தாலென்ன கஸ்தூரி வந்தாலென்ன பெரிதாக ஒன்றும் நடைபெறப் போவதில்லை. அடுத்தவர் நமக்கு ஏதும் செய்வார்களா என்று காத்துக் கொண்டிராமல் நம் மக்களின் பிரதிநிதிகள் மக்களுக்காகச் சேர்ந்துழைப்பார்களாஎன்பது பற்றிச் சிந்திக்கவேண்டும். அவர்கள் சேர்ந்து செயற்பட முன்வரவேண்டும். அப்போதுதான் வாய்ப்புக்களை வசப்படுத்தலாம்.

*(கவி, யாழ்ப்பாணம்)*

**கே: 'மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே' என்று சில பெரியவர்கள் உதாரணமாக இப்பழமொழியைச் சிறுவர்களுக்குக் கூறுகின்றார்கள். யாராவது மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவார்களா? அப்படி இருக்கும்போது, இதனை ஓர் உதாரணமாகச் சொல்லலாமா?**

**ப:** கவி, முதலில் இப்பழமொழியில் வரும் 'குதிரை' என்ற வார்த்தை விலங்கான குதிரையைக் குறிக்கவில்லை. இரண்டாவது, இப்பழமொழியைச் சொல்லுகின்றபோது 'குதிரையை' என்று சொல்லாமல் குதிரை என்றேசொல்லவேண்டும். இதனைவைத்துக்கொண்டு விடயத்திற்கு வரு வோம். ஆற்றுக்படுகைகளில்அல்லதுகடல்நடுவில் சிறுசிறு மண்மேடுகள் காணப்படும். இவற்றைக் 'குதிர்'கள் என்பார்கள். ஆகவே, இம் மண்மேடுகளை குதிரைகளை நம்பிக் கால் வைத்தால் கால்கள் கீழே, மண்ணுக்குள் சென்று புதைந்துபோகும். அதனால், உயிர் ஆபத்துக்கள் கூட ஏற்படலாம். அதனால்தான், 'மண் குதிரை நம்பி ஆற்றில் இறங்காதே' என்றார்கள். காலம் செல்லச் செல்ல இப்பழமொழி, 'மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே' என்று வந்துவிட்டது. இப்படி இன்னும் பல உண்டு! இப்பழமொழியின் பொருள், ஒரு விடயத்தைச் சரியாகத் தெரிந்துகொள்ளாமல் அதில் ஈடுபடக்கூடாது என்றாகின்றது.

*(ஆனந்தன், கிளிநொச்சி)*

**கே: அமெரிக்க இராஜாங்க அமைச்சர் மைக் பொம்பியோ கடந்த மாதம் இலங்கை வந்தபோது நாட்டுத் தலைவர்களுக்கு கடும் தொனியில் சில எச்சரிக்கைகளை விட்டுச் சென்றிருக்கின்றார். இவர்கள் கேட்பார்களா?**

**ப:** ஆனந்தன், இம்முறை கொஞ்சம் கடும் தொனியில்தான் அமெரிக்கா செயற்பட்டிருக்கின்றது. ஆனால், இதில்இன்னுமொரு விசித்திரமான விடயம் இருக்கின்றது! அது என்னவென்றால், அவர்கள் எச்சரிப்பதுபோல எச்சரிப்பார்கள்! இவர்கள், அவற்றைக் கேட்டு நடப்பதுபோல நடிப்பார்கள்! இரண்டு பக்கங்களிலும் இராஜ' தந்திரிகள்' இராஜ'தந்திரம்'கள் இருக்கத் தானே செய்யும்!

*(கமலா, யாழ்ப்பாணம்)*

**கே: காதலைப்பற்றியும் திருமணத்தைப் பற்றியும் எவ்வளவுதான் சொன்னாலும் எழுதினாலும் அவற்றின் வித்தியாசத்தை எப்படி ஆழமாகப் புரிந்துகொள்ளலாம்?**

**ப:** கமலா, ஒரு ஞானியிடம் சென்ற ஒருவன் இதே கேள்வி ஒன்றைக் கேட்கின்றான். அதற்கு அந்த ஞானி, "முதலில், நீ இந்தப் பூந்தோட்டத்திற்குப் போய், அங்கே எது உயரமான, உனக்குப் பிடித்த ரோஜாச் செடி எனத் தோன்றுகின்றதோ அதைப் பறித்துக்கொண்டு வா" எனக் கூறுகின்றார். அத்துடன், ஒரு நிபந்தனையையும் விதிக்கின்றார். "எக்காரணத்திற்காகவும் போனவழியே நீ திரும்பி வரக்கூடாது!" என்கிறார். நிபந்தனையை ஏற்றுக்கொண்டவன் சிறிது நேரத்தில் வெறும் கையுடன் திரும்பி வந்தான். ஞானி, "எங்கே உன்னைக் கவர்ந்த, உயரமான ரோஜாச் செடி?" எனக் கேட்கின்றார். அவன், 'தோட்டத்திற்குள் சென்ற போது முதலில் உயரமான ஒரு செடி என்னைக் கவர்ந்தது. அதைவிட உயரமான செடி இருக்கக்கூடும் என்று தொடர்ந்து நடந்தேன். இன்னும் உயரமான ரோஜாச் செடிகள் தென்பட்டன. அவற்றைவிட உயரமான செடிகள் இருக்கக் கூடும் என மேலும் நடந்தேன். அதன் பிறகு, தென்பட்ட ரோஜாக்கள் எல்லாம் கட்டையான ரோஜாச் செடிகளாக இருந்தன. வந்த வழியே திரும்பி வரக்கூடாது என்பதால் முன்னர் பார்த்த உயரமான செடியையும் கொண்டுவர முடியாமல் போய்விட்டது' என்கின்றான். ஞானியோ புன்னகைத்தபடி, 'இதுதான் காதல்!" என்றார். பின்னர் ஞானி, "சரி போகட்டும், அதோ அந்தத் தோட்டத்தில் உன் கண்களுக்கு அழகாகத் தெரிகின்ற ஒரு சூரியகாந்திச் செடியைப் பிடுங்கி வா. ஆனால்,இப்போது கூடுதலாக இன்னுமொரு நிபந்தனை! ஒரு செடியைப் பிடுங்கிய பின், வேறொரு செடியைப் பிடுங்கக்கூடாது." சிறிது நேரத்தில் அவன் ஒரு சூரியகாந்திச் செடியுடன்வந்தான். ஞானி, "இதுதான்அந்தத் தோட்டத்திலேயே அழகான சூரிய காந்திச் செடியா?" எனக் கேட்டார். சீடனோ, 'இல்லை இல்லை, இதனைவிட அழகான செடிகள் இருக்கின்றன. ஆனால் முதல் முறை கோட்டை விட்டதுபோல் இந்த முறையும் விட்டுவிடக்கூடாது என்ற அச்சத்தில் முகப்பிலேயே எனக்கு அழகாகத் தோன்றிய அந்த செடியைப் பிடுங்கி வந்துவிட்டேன். நிபந்தனைப்படி, ஒரு செடியைப் பிடுங்கிய பின், வேறு செடியைப் பிடுங்கக்கூடாது என்பதால், அதன் பிறகு இதனைவிட அழகான செடிகளை நான் பார்த்த போதும் பறிக்கவில்லை' என்கிறான். இப்போது ஞானி சிரித்துக்கொண்டே சொன்னார்: "இதுதான் திருமணம்!" என்று.

*(நாயகி, யாழ்ப்பாணம்)*

**கே: உங்கள் விடைகளை வாசிக்கும் போது வார்த்தைகளோடு விளையாடுவதுபோல இருக்கின்றது! என் எண்ணம் சரியானதா?**

**ப:** சிலர், வாழ்க்கையோடு விளையாடும் போது நான் மற்றவர்களை வளர்க்கக் கூடிய, அடுத்தவருக்கு வளம் சேர்க்கக் கூடிய, மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய வார்த்தைகளோடு விளையாடினால் என்ன நாயகி!

---

# அடிமைத்தனம் (6ம் பக்கத் தொடர்ச்சி)

### ஆசை (Desire)

ஆசை என்ற சொல் சில வேளைகளில்பலருக்கு ஓர் எதிர்மறை (Negative) யாகவே தோன்றலாம். துன்பங்களுக்கு அடிப்படைக் காரணம் ஆசைகளே என்பது சாக்கிமுனியின் கூற்று. இதில் உண்மையில்லாமல் இல்லை. மன்னிக்கவும் பெரிய உண்மை உண்டு. ஆனால் இந்த ஆசை என்ற சொல்லை ஆழமாகப் பார்ப்போமானால், அது அகத்தே, அடி மனதில் மனிதத்தோடு பிறந்த ஒரு தாகம். இந்த அடிமனதில் உள்ள தாகத்தை உணராத பொழுது அது நுனி மனதில் ஓர் ஆசையாக வடிவமெடுக்கின்றது. இந்தத் தாகத்தை உணருவோர் சில வினாக்களை எழுப்புவார்கள்: எழும் இந்தத் தாகத்தின் நோக்கமென்ன? எதிர்பார்ப்பு என்ன? இந்தத் தாகத்தைத் தீர்க்க முடியுமா? அடி மனதில் உள்ள இந்தத் தாகத்தை ஆழ்மன மௌனத்தில் "கேட்கும்" பொழுது தான் இந்தக் கேள்விகள் தோன்றும். இந்த வினாக்கள் தான் மனித வாழ்வுப் பயணத்தை ஒரு தேடல் பயணமாக மாற்றிவிடும். இது ஓர் ஆன்மீகப் பயணமாக மாறும்.

### எல்லை எங்கே?

இந்தத் தேடலின் முடிவெங்கே என்று கேட்டால் சில ஞானிகள் "கடவுள்" என்று சொல்வார்கள். வேறு சில ஞானிகள் "அன்பு" என்று சொல்வார்கள். இயேசுவும் தான் தந்த ஒரே கற்பனையில் (சட்டத்தில்) தந்துள்ளார். யோவான் எழுதிய திருமடலில் "கடவுள்தான் அன்பு" என்று கூறினார். "அன்பே சிவம்" என்பது சைவத்தின் கூற்று. இன்னும் சிலர், அது "சக்தி" என்றழைப்பார்கள். இன்றைய விஞ்ஞானம் அதையே வெளிப்படுத்துகின்றது.

செபஸ்ரியன் மூர் என்ற எழுத்தாளர் இதை "என்ன வென்று" எனக்குத் தெரியாது" ("I don't know what!") என்று ஓர் ஆழத்தைச் சுட்டிக்காட்டினார்கள். இந்த "என்ன வென்று எனக்குத் தெரியாது" தான் "மகிழ்ச்சி" (Joy) என்று சொல்லிய பின்னர் அந்த "மகிழ்ச்சி" தான் கடவுள் என்று எழுதி முடித்தார் சி. எஸ். லூயிஸ் என்ற ஆங்கில எழுத்தாளர்.

### முழுமை

என்னோடு பிறந்த அந்தத் தாகம் ஒரு முழுமையைத் (Wholeness) தேடுகின்றது என்று இன்றைய ஆன்மீக எழுத்தாளர் சிலர் எடுத்துக் கூறுகின்றனர். எனது கருத்தும் அதுவே. கருத்து மட்டுமல்ல, எனது திடமான நம்பிக்கையும் அதுவே. இயேசு சபைக் குருவும் - ஓர் இறையிலாளரும், விஞ்ஞானியுமான ரெய்யாடி ஷாடான் (Teilhard de Chardin) "முழுமை" தான் என்று ஆணித்தரமாக 1940களில் அடித்துக்கூறினார். இன்றைய விஞ்ஞானிகள் சிலர் - உதாரணம் டேவிட் போம் "உடைபடாத ஓர் முழுமை" என்று கூறி விஞ்ஞான உலகையே வியக்கவைத்தார். மலை உரையின் முடிவில், இயேசு சொன்னார் "என் தந்தை முழுமை யாக இருப்பது போல் நீங்களும் முழுமையாக இருங் கள்" மத் 5:48 அனைத்து மக்களுக்கும் இயேசு விடும் ஆணித்தரமான அழைப்பு. இது கடவுள் முழுமை உடைய ஒன்று God is whole.

### தடைகள்

இந்த அகத்தே உள்ள தாகத்தை பெரும்பான்மையினோர் உணர்வதில்லை: அடையாளப்படுத்துவதில்லை: அதனால் அந்தத் தாகத்தின் தேடலில் ஈடுபடுவதில்லை. ஆகவே அடிமனதில் உள்ள இந்தத் தாகத்தின் புறத்தோற்றமாக நுனி மனதில் எழும் ஆகைகளைத் தீர்ப்பதற்கு ஒரு பொருளை மையமாகக் கொண்டு, அதனுடன் ஒரு கட்டாய இணைப்பில் தம்மைத் தாமே அடிமைப்படுத்தி விடுகிறார்கள். இந்தப் "பொருள்" ஒன்றாகவும் இருக்கலாம், பலவாகவும் இருக்கலாம். நாம் ஒவ்வொருவரும் எதற்கெல்லாம், எந்தப் பழக்கத்திற்கெல்லாம் அடிமைப்படுத்தப்பட்டுள்ளோம் என்று துணிவுடன், நேர்மையுடன் பார்த்தல் அவசியம். அன்றேல் எங்கள் ஆன்மீகப் பயணம் தடைப்படும்.

### மதம்

மதத்தின் அடிப்படைத்தன்மை எம்மை அதே முழுமைக்கு அழைத்துச் செல்வது தான். ஆகவே மதம் ஒரு வழி மட்டுமே மாறாக அந்த வழியை நாம் முடிவாக்கிக் கொண்டால், நாம் வழியிலேயே தேங்கி விடுவோம். மேலும் அந்த மதத்தையே எமது ஆசையின் பொருளாக்கி அந்த மதத்துடன் என்னை ஓர் கட்டாய இணைப்பில் அறைந்து, மதப்பழக்கங்களுக்கு (உ +ம் ஆராதனைகள், சட்டங்கள், சடங்குகள்) என்னை அடிமைப்படுத்துகின்றேன். ஆகவே மத வெறிக்கு மட்டுமல்ல மதத்தின் அடிப்படைத் தன்மையை மறுத்து வெளி ஆடம்பரங்களுக்கும் சட்டங்கள், சடங்குகளுக்கும் என்னை அடிமைப் படுத்துகின்றேன். இதை இயேசு கடுமையாக விமர்சித்தார். "சுமைசுமந்து சோர்ந்திருப்போரே, என்னிடம் வாருங்கள். நான் உங்களைத் தேற்றுவேன்." இந்தத் தேற்றுவேன் என்ற சொல்லை "Rest" என்று ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்கள். அதாவது இந்த அடிமைப் படுத்தும் அனைத்திலிருந்தும் நீங்கள் விடுதலை பெற நான் வழிகாட்டுவேன் என்பதே இயேசுவின் அழைப்பின் பொருள். எந்தச் சுதந்திரத்தை நாம் எமது அடிமைத் தனத்தால் இழந்தோமோ, அதிலிருந்து, விடுதலை பெற வழிகாட்ட வந்தார் இயேசு. ஆகவே, இந்தக் கட்டுரை திருவருகைக் காலத்திற்கு முரணானது அல்ல.

### முடிவாக

மனிதப் பழக்கங்களுக்கு, மனித ஆசைகளுக்கு அடிமையாவது ஒரு பாரிய விடயம். ஒரு மலையை ஒரு சிறு வட்டத்துள் அடக்கிவிட முடியாது. அதுபோன்று ஒரு பாரிய விடயத்தை இக்கட்டுரையில் அடக்கிவிட முடியாது. நான் இந்த அடிமைத்தனம் என்ற விடயத்துக்கு நீதிசெய்யவில்லை என்ற உணர்வு தோன்றுகின்றது. இதையிட்டு விரிவாக எழுத வேண்டுமென்று தான் நினைக்கின்றேன்.

நான்கு விடயங்களை முதன்மைப்படுத்த விரும்புகின்றேன்.நாம் எல்லோருமே ஏதோ ஒரு பொருளுடன் அன்றேல் பல பொருட்களுடன் (Object s) எம்மை உடன்படுத்தி, அதனால் வரும் ஒரு பழக்கத்திற்கு எம்மைக் கட்டாயப்படுத்தி, அந்தப் பழக்கத்திற்கு நாம் அடிமையாகின்றோம். அனைத்து அடிமைத்தனங்களும் அழிவுக்குரியது. இந்த அடிமைத் தனத்திற்கும் மனித ஆன்மீகத்திற்கும் ஒரு தொடர்பு உண்டு. நானே உருவாக்கிய அடிமைத் தனங்களில் இருந்து வெளியே வர, விடுதலை பெற, எல்லையில்லா ஒரு அகச் சுதந்திரத்தை அனுபவிக்க என்னால் முடியும். ஆயினும், இதற்கு உறுதுணையாக இருப்பது மனித ஐம்புலன்களுக்கு எட்டாத, சாயல் ஒன்று இல்லாத ஒன்று அதுதான் அருள். இந்த அருளை வழிகாட்ட இயேசு மனிதனானார், ஞானி ஆனார்.

## செபமே நம் ..... (8ம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணங்களோடு விளையாடுகின்றவன் எழுத்தாளன் ஆகின்றான். வண்ணங்களோடு விளையாடுகின்றவன் ஓவியன் ஆகின்றான். கல்லோடு விளையாடுகின்றவன் சிற்பி ஆகின்றான். மௌனத்தோடு விளையாடுகின்றவன் ஞானி ஆகின்றான். பொய்மையும் போலியும் பகட்டுத் தன்மை மலிந்த நமது சமுதாயக் குடும்ப குழு வாழ்க்கையில் ஞானியாக இல்லாத ஒருவர் கிறிஸ்தவராக இருக்க முடியாது. ஞானியாக மாற அவரின் குரலைக் கேட்க நம் உள்ளத்திலும், எண்ணத்திலும் அமைதி தேவை. கடவுளின் வார்த்தையைக் கேட்டு அதைச் சீரிய சிந்தனையில் பதிய வைத்து நூறு மடங்கு பலன் கொடுத்த அன்னை கன்னிமரியாளின் பரிந்துரையில் இந்த மௌனக் கலையை நம்மில் வளர்க்க முனைவோம்.

**முடிவுரை**

புனித அகுஸ்தினார். கூறுவதுபோல் "நன்றாகச் செபிக்கத் தெரிந்தவன் நன்றாக வாழத்தெரிந்தவன் ஆவான்". எனவே நமது ஆன்மீக வாழ்வில் வளர்ச்சியையும், முதிர்ச்சியையும் அடைய உள்ளத்தால் இறைவனுடன் இணைய முயல்வோம். "ஒருவர் உள்ளத்தில் செபத்தின் மூலம் ஆறுதலை உணராவிடினும் முயற்சியோடும் கவனத்தோடும் அன்போடும் செபித்தால் செபத்திற்கு மதிப்பு உண்டு" என்று புனித திரேசாள் கூறுகின்றார். எனவே நமது வாழ்வு வளம்பெற உறவு விரிவடைய ஆன்மீக வாழ்வில் முதிர்ச்சி காணச் செபிப்போம். செபமே நம் வாழ்வில் ஜெயம்.

## விண்ணக நுழைவின் 25வது ஆண்டு நினைவு



| மண்ணகம் | இறைவனடி (பாகிஸ்தான்) |
|---|---|
| 23 . 07 . 1940 | 27 . 12 . 1995 |

கடவுளின் நற்செய்தியை அறிவிப்பதே நான் செய்யும் திருத்தொண்டு அதுவே என் குருத்துவப்பணி

-[உரோமர் 15.16]

இதனை நிறைவுசெய்யச் சலியாது உழைத்தாய்,
உன் சேவை நிறைவு கண்டோ
இறைவனடி சென்றுவிட்டாய்
உன் ஆன்மா சாந்திபெற இறைவனை
வேண்டுகிறோம்.

அருட்திரு

### ஆனந்தம் ரெம்சி குரூஸ் O.M.I அடிகள்

குருத்துவம் 21.12.1970

குருத்துவ 50ம் ஆண்டு நிறைவு 21.12.2020

"சீவியத்தில் நேசித்தோம், மரணத்தில் மறவோம்"

வங்காலை
மன்னார்

பிரிவால் துயருறும்
உற்றார், உறவினர்கள்

## விண்ணக வாழ்வின் 1ம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 . 11 . 1919 | 15 . 12 . 2019 |

AD 84

அமரர்

### மடுத்தீன் பாக்கியநாதர் (பாக்கிய மாஸ்டர்)

(இளைப்பாறிய அதிபர் றோமன் கத்தோலிக்க பாடசாலை)

ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நான் குடியிருக்க வேண்டும் (திபா 27:4)

நீர் விழி தோய!
நீங்கா நினைவுகள் மிளிர நின்
பிரிவின் காலம் ஆண்டு ஒன்று ஆனதே ஐயா!

NO,1577-1111 LAWRENCE
AVE WEST
NORTH YORK, ONTARIO
M6L 1C4, TORONTO
CANADA
T.P.416-245-1552

இவரின் பிரிவால் ஈரவிழிகளுடன்
துயருறும் இவரது
பிள்ளைகள் மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
உற்றார் உறவினர்கள்!!

## நான் ஒரு ..... (3ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு எறும்பைப் போலக் கீழிறங்கி யாரோ ஒருவரை நோக்கி நடக்கத் தொடங்கிவிடுகின்றன. கதைகள் மரணிப்பதே இல்லை. அவை கூடுவிட்டுக் கூடுபாய்கின்றன.

அந்தக் கடற்கரை மணல் மீது தனியே இருந்தபடி, வலையில் இருந்து மீன் தெரிந்து கூடைக்குள் போட்டபடி இருக்கும் அந்தத் தலைநரைத்துப் போன மனிதன், குஞ்சு மீன்களைத் தூக்கி எறிந்தபடி, தன்னைச் சூழ நிற்கிற காகங்களிடம் ஏதோ கதைத்தபடியேதான் நிற்கிறான். மீன்களைப்போலக் காகங்கள் அவரின் கதைகளையும் கொத்தி விழுங்கிக் கொண்டே இருக்கின்றன. தாத்தாக்களின் கதைகளைக் கேட்கப் பல வீடுகளில் பேரன் பேத்திகளே இருப்பதில்லை.

பலர் தாம் வாழ்ந்த பழைய வீட்டை விட்டு வேறு இடத்திற்குப் போக விரும்புவதேயில்லை, காரணம் அது வெறும் வீடு அல்லவே. அந்த வீட்டின் படிகளில், நிலைகளில், ஜன்னல் ஓரங்களில், சாமி அறை மூலைகளில், அடுப்பங்கரைகளில் பிள்ளைகளின் புத்தக அலுமாரிகளில்... என ஒவ்வொரு இடத்திலும் வாழ்வின் பல கதைகள் ஒட்டிக்கொண்டே கிடக்கின்றன. இந்த வீட்டை கதைகள் எனும் கண்ணுக்குத் தெரியாத இழைகளால் பின்னப்பட்டதோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

சவக்காலையில் புதைத்து உக்கிப்போன மனிதனோ, சுடுகாட்டில் எரித்துச் சாம்பலாகிப்போன ஒருவனோ அதோடு மறைந்துபோவதில்லையே? யாரோ ஒருவரின் மனதில் ஒரு கதையாக வாழ்ந்து கொண்டு தானே இருக்கிறார்.

இப்போதும் எங்களை ஒரு தென்றலைப் போலவோ, புயலைப் போலவோ கடந்துபோன யாரோ ஒருவரின் பெயர் சொன்னால் சட்டென ஒரு கண்ணீர்த் துளியையோ, ஒரு புன்னகையையோ வருவிக்கக்கூடிய அவரைப் பற்றிய ஒரு கதை, இதயத்தில் ஒளித்தபடியேதானே இருக்கிறது. தன் சேலைத் தலைப்பில் சில்லறைகளை முடிந்து சேமித்து வைத்திருக்கிற ஒரு பாட்டியைப்போல, ஒவ்வொருவனும் ஒரு கதையை பெரும் செல்வத்தைப்போலச் சுமந்து கொண்டுதானே திரிகிறான்.

இறுதியில் நானும் ஒரு கதையாக மட்டும்தான் மிஞ்சிவிடப் போகிறேன். முடிந்தால் கேட்கக் கேட்க இனிப்பான ஒரு கதையை செய்துவிட்டுப் போவோமே. இனிப்பான ஒரு தேன்கூடுபோல உலகம் என் கதையை நாக்கு இனிக்க இனிக்கப் பேசட்டுமே. வானத்தைப் போலக் கதைகளுக்கும் மரணமில்லை.

## இலக்கு வைத்து.... (9ம் பக்கத் தொடர்ச்சி)

பிறகு அவர் எழுந்து நின்று, என் கண்களை நேராகப் பார்த்து, 'ட்ரென்னெல், நீங்கள் திறமையானவர். அடுத்தமுறை பிரச்சனை ஏற்படும்பொழுது இதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்" என்று கூறினார். அந்த அலுவலகத்தை நான் விட்டு வெளியேறிய போது புன்னகைத்தது எனக்கு நினைவாக இருக்கின்றது. சற்றுமுன் தான் செவிமடுத்திருந்த விடயங்களைத் தன் மனதில் போட்டவாறே, 'அப்படியானால்..' என்று அந்த இளைஞர் மேலும் தொடர்ந்தார்." நாம் எமது இலக்குகளைத் தரிசனம்செய்வோம். அவற்றின் செயற்றிறனை உற்றுநோக்குவோம். எமது நடத்தை எமது நடத்தையோடு ஒத்துப்போகின்றதா என மதிப்பீடு செய்வோம்.

## 45ம் நாள் நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 03 . 08 . 1937 | 20 . 10 . 2020 |

AD 83

அமரர்

### திரு. மனுவல்பிள்ளை ஜேம்ஸ் ஸ்ரனிஸ்லாஸ் [ஜேம்ஸ்]

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (யோவான் 11 :25))

கலங்கரை விளக்கு ஒன்று கானல் நீராய்ப் போனதென்ன
நாட்கள் 45 ஆகின்றதே பிரிவின் வலி நீள்கின்றது
எங்கு காண்போம் உங்கள் திருமுகத்தை.

உங்கள் ஆன்மா இறைவனின் இரக்கத்தில்
புனிதர்களோடு புனிதராக நீங்காப் பேரின்பத்தில்
என்றும் நிலைக்க இறைவனிடம் வேண்டுகின்றோம்.

வடக்கு றோட்,
நாரந்தனை

பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, வெளிநாட்டில் வசிக்கும் பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவுகள்

## விண்ணக வாழ்வின் 8ம் ஆண்டு நினைவு



| தாய் மடியில் | இறை அடியில் |
|---|---|
| 05 . 09 . 1956 | 14 . 12 . 2012 |

AD 82

அமரர்

### வலன்ரைன் சுவாமிநாதன் (ஜெயரட்ணம்)

கடவுளைக் கண்டதில்லை உம் கண்களில் தான் கண்டோம்
கண்முன்னே நடமாடிய தெய்வம் – நீங்கள்
மண்ணை விட்டுப் போனாலும் எம் கண்ணை விட்டகலாமல்
விண்ணுலகில் நீர் இருந்து மண்ணுலகில் எம் குறை தீர
வேண்டிடுவீர் விண்ணகத் தந்தையிடம்.

அன்பான இறைவா,

இவ் உலகிலிருந்து உம்மிடம் அழைத்துக்கொண்ட உமது அடியான் அமரர் வலன்ரைன் சுவாமிநாதன் அவர்களை உமது நித்திய வான் வீட்டில் சேர்த்தருள வேண்டுமென்று இரந்து மன்றாடுகின்றோம்.

றொறன்டோ,
கனடா
(மண்டைதீவு)

இவரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

# கிறிஸ்மஸ் ஒளியை அணைக்கும் வல்லமை எந்தவொரு வைரசுக்கும் கிடையாது – திருத்தந்தை



வருடாவருடம் வத்திக்கான் சதுக்கத்தில் நிறுவப்படும் கிறிஸ்மஸ் மரத்தையும், குடிலையும் திறந்து வைத்த திருத்தந்தை பிரான்சிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

இப்போது உலகெங்கும் சிறுவர் முதல் வயோதிபர் வரை கிறிஸ்மஸ் மரங்களை அலங்கரிப்பதிலும், கிறிஸ்மஸ் குடில் அமைப்பதிலும் மகிழ்ச்சியோடு ஈடுபட்டு வருகிறார்கள். எந்தவொரு தீமையாலும் கிறிஸ்மஸ் ஒளியை அணைக்க முடியாது என்பதையே இது காட்டுகிறது.

ஏனெனில் கிறிஸ்மஸ் என்பது நம்பிக்கையின், எதிர்நோக்கின் உன்னத நிகழ்வு. எந்தத்தீமைக்கும் முடிவுண்டு, விடிவுண்டு என்பது தான் கிறிஸ்து மனிதனாக வந்ததன் அர்த்தம் என்று குறிப்பிட்ட திருத்தந்தை, நம்பிக்கையோடு கிறிஸ்துவை வரவேற்க ஆயத்த மாகுமாறு அழைப்பு விடுத்தார்.

ஒவ்வொரு வருடமும் வெவ்வேறு நாடுகளிலிருந்து கிறிஸ்மஸ் மரம் வத்திக்கான் சதுக்கத்துக்குக் கொண்டுவரப்பட்டு நடப்படுவது வழக்கமாகும். இவ்வருடம் ஸ்லவேனியா குடியரசு நாட்டிலிருந்து இம்மரம் கொண்டுவரப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# "ஒரு தந்தையின் இதயத்தோடு" என்ற தலைப்பில் திருத்தூது மடல்



புனித சூசையப்பர், உலகளாவிய திருஅவையின் பாதுகாவலர் என்று அறிவிக்கப்பட்டதன் 150ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், டிசம்பர் 08, "Patris corde" அதாவது, "ஒரு தந்தையின் இதயத்தோடு" என்ற தலைப்பில் திருத்தூது மடல் ஒன்றை வெளியிட்டு, புனித சூசையப்பர் யூபிலி ஆண்டு ஒன்றையும் அறிவித்துள்ளார்.

அருமையான தந்தை, அன்பும், கனிவும் நிறைந்த தந்தை, பணிவுள்ள தந்தை, ஏற்றுக் கொள்ளும் தந்தை, படைப்பாற்றல்மிக்க துணிவுள்ள தந்தை, உழைப்பாளித் தந்தை ஆகிய ஆறு தலைப்புக்களில், புனித சூசையப்பர் பற்றி விளக்கியுள்ள திருத் தந்தை, நம் மனமாற்றத்திற்காக, புனித சூசையப்பரிடம் மன்றாடுவோம் என்ற ஒரு சிறிய செபத்துடன் இந்த மடலை நிறைவு செய்துள்ளார்.

இயேசுவின் வளர்ப்புத் தந்தைக்கென, சிறப்பான ஓர் ஆண்டை அர்ப்பணித்துள்ளேன் என்று குறிப்பிட்டுள்ள திருத்தந்தை, கொவிட்-19 கொள்ளைநோய், சாதாரண மக்கள் மற்றும், சமுதாயத்தின் பார்வையிலிருந்து புறக்கணிக்கப்பட்ட மக்களின் முக்கியத்து வத்தை உணரச்செய்துள்ளதோடு, ஒவ்வொரு நாளும் பொறுமை, நம்பிக்கை மற்றும், பொறுப்புணர்வு ஆகியவற்றைச் செயற்படுத்தவும் நம்மைத் தூண்டுகிறது என்று கூறியுள்ளார்.

புனித சூசையப்பர், பொது மக்களால் அதிகம் கவனிக்கப்படாத, அதேநேரம் காலமறி ந்து செயற்படும் மறைவான வாழ்வு வாழ்ந்தவர், ஆயினும், அவர் மீட்பு வரலாற்றில் எதனாலும் ஒப்பிடப்படமுடியாத செயலாளராக இருந்தார் என்று கூறியுள்ள திருத்தந்தை, இதனாலேயே, இந்தப் புனிதர் கிறிஸ்தவர்களால் எப்போதும் அதிகம் அன்புகூரப்படு கிறார் என்று குறிப்பிட்டுள்ளார்.

தந்தையர்கள், பிறக்கும்போதே அவ்வாறு பிறப்பதில்லை, அவர்கள் ஒரு குழந்தையின் வாழ்வு மீது பொறுப்பேற்கும்போது தந்தையராக மாறுகின்றனர் என்றும், இன்றைய சமுதாயத்தில் சிறார், பலநேரங்களில் தந்தையர்களால் கைவிடப்பட்ட அநாதைகளாக இருப்பது கவலை தருகின்றது என்றும் கூறியுள்ள திருத்தந்தை, இந்நிலையிலுள்ள இன்றைய உலகிற்கு, புனித சூசையப்பர் சிறந்த எடுத்துக்காட்டான மனிதராக உள்ளார் என்றும், இன்றைய உலகிற்கு, முதலாளிகள் அல்ல, தந்தையர்களே தேவைப்படு கின்றனர் என்றும் கூறியுள்ளார்.

புனித சூசையப்பர் யூபிலி ஆண்டில், சிறப்பு நிறைபேறு பலன்களை அறிவித்திருப்பதா கவும் குறிப்பிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புனித சூசையப்பர், ஒரு தந்தையாக வாழும் வாழ்வுப் பாதையை எமக்குக் காட்டியருளும், இரக்கமும், துணிவும் நிறைந்த அருளை எமக்குப் பெற்றுத்தாரும் என்று செபித்து, இந்த மடலை நிறைவு செய்துள்ளார்.

# புனித வின்சென்ற் டி போல் சபை பரந்தனில் உதயம்




பரந்தன் பங்கில் புனித வின்சென் டி போல் சபையை பங்குத்தந்தை அருட்பணி R.H. சகாயநாயகம் அடிகளார் ஆரம்பித்து வைத்துள்ளார். பிறர் துயர் துடைக்கும் தன்னார்வப் பணியைப் பங்குச்சூழலில் ஏற்படுத்தி ஏழை மக்களோடு தம்மை அடையாளப்படுத்தி இறை அன்புப்பணியை இச்சபையினர் எழுச்சியோடு செயற்படுத்தி வருவதை அவதானிக்க முடிகின்றது.

பரந்தனிலுள்ள இச்சபை அங்கத்தவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு யாழ். தாய்ச்சபை அங்கத்தவர்கள் 5 பேர் பரந்தன் பங்கு சென்று அவர்களை ஊக்குவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

# புலமைப் பரிசில் பரீட்சையில் முன்னிலையிலுள்ள எம் கத்தோலிக்க பாடசாலைகள்

## யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி




யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 73 ஆகும். வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்று 24 மாணவர்கள் சித்தியடைந்ததுடன் பி. அக்ஷயா 191 புள்ளிகளைப் பெற்றுள்ளார். 98% மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். இக்கல்லூரியில் மாணவர்களின் சித்தி வீதம் 98% ஆகும்.

## புனித பற்றிமா றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை

புனித பற்றிமா றோமன் கத்தோலிக்கத் தமிழ் கலவன் பாடசாலையில் இவ்வருடம் புலமைப்பரிசில் பரீட்சையில் 27 மாணவர்கள் தோற்றினர். அவர்களில் 09 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்றுத் தேர்ச்சியடைந்துள்ளனர். தோற்றிய மாணவர்கள் அனைவரும் 90 புள்ளிகளுக்குமேல் பெற்று 100% சித்தியினைப் பாடசாலைக்குப் பெற்றுத்தந்துள்ளனர்.




இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2020ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 13ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.